Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 15 வெள்ளிக்கிழமை (27-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:93

## நாட்டில் சமாதானத்தை வலியுறுத்தி யாழ். முஸ்லிம்கள் இன்று பேரணி

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து பின்னர் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் இன்று வெள்ளிக்கிழமை சமாதானப் பேரணி ஒன்றை நடத்துகின்றனர்.

இன்று காலை 9 மணிக்கு யாழ். நகரப் பள்ளிவாசலில் இருந்து ஆரம்பமாகும் இப்பேரணி கஸ்தூரியார் வீதி - காங்கேசன்துறை வீதி வழியாக நாவலர் வீதியில் அமைந்துள்ள புதிய பள்ளிவாசலைச் சென்றடையும். அங்கு நாட்டில் சமாதானம் வேண்டி தொழுகை நடைபெறும்.

பின்னர் அங்கிருந்து புறப்படும் பேரணி மானிப்பாய் வீதி - காங்கேசன்துறை வீதி - பண்ணை வீதி ஆகியன ஊடாக மண்கும்பானில் உள்ள பள்ளிவாசலை நாளை சனிக்கிழமை சென்றடையும். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மண்கும்பானில் இருந்து வேலணை நோக்கிச் செல்லும் இப்பேரணி, அங்கிருந்து பின்னர் நயினாதீவு செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-8-ரி)

## ரணிலுக்குக் கண்டியில் மகாநாயக்கர் ஆசி எதிரணியினர் அநுராதபுரத்தில் உறுதிமொழி!

### இருதரப்புத் தேர்தல் பிரசாரங்களும் ஒரே நேரத்தில் ஆரம்பம்

ஆட்சி அமைத்து ஐக்கிய இலங்கையை உருவாக்கி சமாதானத்தை நிலைபெறச்செய்யும் பிரதமர் ரணிலின் முயற்சிக்கு இறைவனின் அருள் கிட்டுவதாக என்று அஸ்கிரிய பீடாதிபதி வண. உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் கண்டியில் வைத்து ரணிலுக்கு ஆசீர்வாதம் வழங்கினார்.

அதேவேளை, ஜனாதிபதியின் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அநுராதபுரம் சென்று புனித மகா போதியில் உறுதி எடுத்துக்கொண்டனர். இந்த இரு நிகழ்ச்சிகளையும் அடுத்து இரு தரப்பினரின் தேர்தல் பிரசாரங்களும் நேற்று ஒரே நேரத்தில் முறையே கண்டியிலும், அநுராதபுரத்திலும் ஆரம்பமாகின.

ஐ.தே.முன்னணி தனது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை கண்டி மாநகரில் நேற்று நடத்துவதற்கு முன்னர் பிரதமர் ரணில், ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று வழிபட்டதுடன் அஸ்கிரிய மகாநாயக்கரையும் சந்தித்தார். பிரதமருடன் கரு ஜயசூரிய, மலிக் சமரவிக்கிரம, திலக் மாரப்பன, திஸ்ஸ அத்தநாயக்க உட்

(14ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலை யுத்த சூனியப் பிரதேசத்தில் வாக்குச்சாவடி நிறுவ வாய்ப்பில்லை

## கண்ணிவெடிகள் அகற்ற இரண்டு மாதங்கள் செல்லும்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி27

**விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி மற்றும் மருதங்கேணிப் பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான நிலையங்களை முகமாலை யுத்த சூனியப்பிரதேசத்தில் நிறுவ முடியாத நிலையே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வாக்குச் சாவடிகளை அங்கு நிறுவுவதாயின் யுத்த சூனியப்பிரதேசத்தின் இரு மருங்கிலும் புதையுண்டுள்ள ஏராளமான கண்ணிவெடிகள் உடனடியாக அகற்றப்படவேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.**

கிளிநொச்சி மற்றும் மருதங்கேணிப் பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க 60 நிலையங்கள் அமைக்கப்படவேண்டும். இந்நிலையங்களை அமைக்க 300 மீற்றர் நீளமான யுத்த சூனியப் பிரதேசத்தின் இரு மருங்கிலும் உள்ள கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டும்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் 'ஹலோ ரஸ்ட்' என்ற கண்ணி அகற்றும் நிறுவனத்தின் அதிகாரியுடன் நேற்றுப் பேச்சு நடத்தினார்.

"தேர்தல் நடைபெறும் தினத்துக்கு இன்னமும் ஒரு மாத காலமே இருக்கின்றது. அந்தக் காலப்பகுதிக்குள் கண்ணிகளை அகற்ற முடியாது. எம்மிடம் உள்ள வளத்தை முழுமையாகப் பயன்படுத்தினால் கூட இந்தப் பணியை முடிக்க இரண்டு மாதங்கள் வரை செல்லும்.

குறிப்பிட்ட பகுதியில் கண்ணிகள உள்ளனவா என்பது குறித்து மதிப்பீடு ஏதும் செய்யப்படவில்லை. மதிபடு செய்யாமல் எமது கண்ணி அகற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி சென்று பிரசாரம் செய்ய பாதுகாப்புக் கேட்கிறார் டக்ளஸ்

கொழும்பு,பெப்.27

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதியிலும் தமது கட்சி தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

புலிகளின் பகுதிகளுக்குச் சென்று பிரசாரம் செய்வதற்கு தமக்குப் பூரண பாதுகாப்பை வழங்குமாறு அவர் பொலீஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்றிரவு பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

எதிர்வரும் தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்களும் வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதால் அந்த மக்களுக்கும் எமது அரசியல் கொள்கைகளை பிரசாரப்படுத்துவதென முடிவு செய்துள்ளோம்.

எனவே, ஏ-9 வீதி ஊடாக எமது கட்சி உறுப்பினர்கள் சுதந்திரமாகச் சென்று வரவும், வன்னியின் சகல பகுதிகளுக்கும் சென்று தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்கும் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று பொலீஸ்மா அதிபரைக் கேட்டுளோம். - என்று தெரிவித்தார்.(ஐ-4-7)

## மன்னாரில் ஈ.பி.டி.பி. வாகனத்துக்கு தீ!

மன்னார், சின்னக்கடைப் பகுதியில் நேற்று அதிகாலை தேர்தல் வன்முறைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈ.பி.டி.பியினர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு திரும்பிக் கொண்டிருந்தவேளை அவர்கள் பயணஞ் செய்த வாகனம் தீயிடப்பட்டது என்று மன்னார் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்பட்ட பின்னரும், வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகும் வன்னியில் ஏற்பட்ட முதலாவது தேர்தல் வன்முறைச் சம்பவம் இதுவே ஆகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சகல கட்சிப் பிரதிநிதிகளையும் தேர்தல் ஆணையாளர் சந்திக்கிறார்

கொழும்பு,பெப்.27

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சந்திக்கவிருக்கிறார்.

கொழும்பில் மத்திய வங்கியின் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் இந்தச் சந்திப்பில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்கும்படி தேர்தல் ஆணையாளர் சகல கட்சிகளையும் கோரவிருக்கின்றார். தேர்தலில் கட்சிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் கருத்துக்களை கேட்டறிவார்.

இக்கூட்டத்தில் பொலீஸ் அதிகாரிகளும் கலந்துகொள்வர்.(ஐ-3)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது

### பொலீஸார், படையினர் ரோந்து

காத்தான்குடி,பெப்.27

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் நிறைவு பெற்றதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு, கல்லடி பாலத்தின் முனை உட்பட பல இடங்களில் பொலீஸ் காவலரண்கள் புனரமைக்கப்படுகின்றன. பொலீஸாரும், படையினரும் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் காலக் கடமைகளுக்காக

(14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக் கப்பல் தேடுதல்

வடமராட்சி,பெப்.27

வடமராட்சி வடக்கு மீனவர்கள் மீது இன்பருட்டிக்கடலில் வைத்துக் கடந்த திங்கட்கிழமை இந்திய மீனவர்கள் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவத்தில் காணாமற்போன மீனவரைத் தேடும் பணி மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

கடற்படையினரின் 'வீரசூரியா' கப்பலில் கடற்படையினருடன் கண்காணிப்புக் குழுவின் இரு பிரதிநிதிகளும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளும நேற்றுமுற்பகல் 10 மணிக்குக் கடலில் தேடுதல் ஆரம்பித்தனர்.

இன்பருட்டியைச் சேர்ந்த இரத்தினம் சிவானந்தன் (வயது38) என்ற மீனவரே கடலில் காணாமற்போயிருககிறார்.

(ஐ-173-70)

## புலிகளின் பிரதேச மக்கள் வாக்களிக்க வசதி செய்க!

### நோர்வேயிடம் கூட்டமைப்புக் கோரிக்கை

கொழும்பு,பெப்.27

வடக்கு-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கு ஏற்ற வசதிகளைச் செய்யுமாறு நோர்வேயிடம் தமிழ்க்கூட்டமைப்பின் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகளான மாவை சேனாதிராசா, இரா. சம்பந்தன், ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோர் நோர்வே தூதரக அதிகாரிகளை நேற்று நேரில் சந்தித்து இக்கோரிக்கையை விடுத்தனர்.

இதேவேளை -

தேர்தல் ஆணையாளரையும் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் சந்தித்து இது விடயமாகக் கலந்துரையாடியுள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் இல்லையேல் கொத்தணிமுறையில் யுத்த சூனியப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்களை நிறுவவேண்டும் என்றும் கூட்டமைப்பினர் கோரியுள்ளனர்.

(ஐ-3)



### தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த

# முப்படையினரின் சேவையையும் பெற பொலீஸ்மா அதிபர் நடவடிக்கை

அதிகரித்து வரும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா முப்படையினரின் சேவையையும் கோரியுள்ளார்.

இராணுவத் தலைமையக அதிகாரியொருவர் நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் தினமான 17 ஆம் திகதியிலிருந்து நேற்றுக் காலை 6 மணிவரை 116 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

2001 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலுடன் ஒப்பிடும்போது இத்தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. எனவே, வன்முறைச் சம்பவங்களை பொலீஸாரால் தனித்துநின்று கட்டுப்படுத்த முடியாது. எனவேதான் முப்படையினரது சேவையையும் பெற்றுக்கொள்ள பொலீஸ்மா அதிபர் தீர்மானித்துள்ளார் என்று பொலீஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, முப்படையினர், தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக இடம்பெறும் பிரதேசங்களிலுள்ள பொலீஸ் நிலையங்களில் நிலைகொண்டிருப்பர். இப்பகுதிகளில் பொலீஸாரால் கட்டுப்படுத்தமுடியாத வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும்போது மாவட்டப் பிரதிப் பொலீஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் முப்படையினரின் சேவை பெறப்படும்.

பொலீஸ்மா அதிபரின் வேண்டுகோளை அடுத்து இராணுவத்தினர் பொலீஸ் நிலையங்களுக்குச் செல்லத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் இராணுவத் தலைமையக ஊடகப் பிரிவு நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தது.

# நகரில் லொறி மோதி காயமடைந்தவர் மரணம்

### சடலம் அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ். நகரப் பகுதியில் சத்திரத்துச் சந்திக்குச் சமீபமாக நேற்றுமுன்தினம் லொறி மோதியதில் காயமடைந்த ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று மரணமானார்.

இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இவரை அடையாளம் காண உதவுமாறு யாழ். பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க இவர் வேட்டி மட்டும் அணிந்திருந்தார். இவருக்கு தலையில் மயிர் அரிதாகவே காணப்பட்டது எனப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-3)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே கூடுதலான வெற்றி வாய்ப்புகள்

### மட்டு. மாவட்டம் குறித்து ஹிஸ்புல்லாஹ் கணிப்பு

காத்தான்குடி,பெப்.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 4 ஆசனங்களைப் பெறும் வாய்ப்புள்ளது. மீதமுள்ள ஒரு ஆசனத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெறும். கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும், முன்னாள் பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் நிலைவரம் குறித்து அளித்த விசேட செவ்வியிலேயே அவர் இக்கணிப்பீட்டைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறந்த பெறுபேற்றைப் பெறும் ஆனால் தேசிய ரீதியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நிச்சயம் அதிக ஆசனங்களைப் பெறும்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளை அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களில் நிறைவேற்றத் தவறிவிட்டது. அதுவே. வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் ஐக்கிய தேசிய கட்சியை நிராகரிப்பதற்கான காரணமாகும். நாட்டில் நிரந்தர சமாதானம், புதிய கூட்டமைப்பு அரசினால் உருவாகும் எனவும் அவர் கூறினார்.

# வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்புமனுக்கள் ஏற்பது இன்று ஆரம்பம்

கொழும்பு,பெப்.27

வடமேல் மாகாண சபையின் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்வது இன்று ஆரம்பமாகும். குருநாகல், புத்தளம் ஆகிய இரு மாவட்டச் செயலகங்களில் இந்த வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதி வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவடையும்.

இம்மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எணணிக்கை 50 ஆகும். போனஸ் உறுப்பினர்களாக இருவர் நியமிக்கப்படுவர்.

குருநாகல் மாவட்டத்திலிருந்து 34 உறுப்பினர்களும் புத்தளம் மாவட்டத்திலிருந்து 16 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவர்.

### பல்கலைக்கழக ஆசிரியர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை ஒருநாள் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதிக்கு கடந்த வாரம் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைக் கண்டித்தே இந்த அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் கண்டனக்கூட்டம் ஒன்று இடம்பெறும்.

இன்றைய அடையாள வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு அளிக்குமாறு யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தை பல்கலை ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (ஐ-9)

# ஜே.வி.பியுடன் 'சலனசித்திரம்' அமைப்பு இன்று கொழும்பில் சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

சலன சித்திரம் அமைப்புக்கும் ஜே.வி.பி. தலைவர்களுக்கும் இடையேயான சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறுகின்றது.

திரைப்படக் கூட்டுத்தாபனத்தைத தமிழில் இயக்குவது, பணிப்பாளர் சபை நியமனம் செய்வது, கலைஞர் நலவுரிமையை உறுதிப்படுத்துவது, ஆபாசத் திரைப்படங்களைத் தடைசெய்வது உட்பட தமிழ் சினிமாத் துறை வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பல முக்கிய விடயங்கள் பற்றி இச்சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

க.தேவதாசன் தலைமையில் சலன சித்திரம் அமைப்பினரும் விமல் வீரவன்ஸ தலைமையில் ஜே.வி.பியினரும் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டிலுள்ள இனங்களின் சுதந்திரமும், தேசியக்கலை எழுச்சியும் இரண்டறக் கலந்தவை - பிரிக்க முடியாதவை என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இச்சந்திப்பு நடைபெறுவதாக 'சலனசித்திரம்' அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ-8)

# இயற்கை உரம் பாவிக்கும் விவசாயிகளின் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்ப்பாணம் எம்.எல்.அன்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் இயற்கை உரப் பாவனையாளர்களுக்கான அறிமுகவிழா ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர்கூட மண்டபத்தில் மேற்படி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஜி.பி.செட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் குடாநாட்டில் இயற்கை உரப் பாவனையை மேற்கொள்ளும் விவசாயிகளின் அறிமுகம் இடம்பெறும்.

இயற்கைப் பசளைகளான இலைகுழைகள், குப்பை கூளங்கள், ஆட்டெரு, மாட்டெரு, போன்றவற்றை நிலத்துக்கு இடுவதால் கிட்டும் நன்மைகள், அதன் பயன்பாடுகள் என்பன பற்றி அங்கு ஆராயப்படவுள்ளது. விளக்கவுரைகளும் இடம்பெறவுள்ளன.

விளக்கவுரைகளை இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த விஞ்ஞானியும் கலாநிதியுமான எல்.மணிவேல், விஞ்ஞானியும் கலாநிதியுமான பி.குமாரவடிவேல் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஐ-10)

# தேர்தல் வன்முறைகள் தொடர்கின்றன; நேற்று வரை 116 முறைப்பாடுகள்!

நேற்று அதிகாலை 6.00 மணி வரையிலான 24 மணி நேரத்தில் தேர்தல் வன்முறைகள் குறித்து 33 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல் குற்றத்தடுப்பு பொலீஸ பிரிவு தெரிவித்துள்ளது.

ஐ.தே.முன்னணி 12 முறைப்பாடுகளையும் ஐ.தே.சு. கூட்டமைப்பு 12 முறைப்பாடுகளையும் ஜே.விபி. 3 முறைப்பாடுகளையும் செய்துள்ளன பொ.ஐ.மு. 2 முறைப்பாடுகளையும் ஏனைய கட்சிகள் 4 முறைப்பாடுகளையும் செய்துள்ளன.

பொதுத் தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் ஆரம்பமான கடந்த 17 ஆம் திகதிமுதல் இதுவரை 116 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் தேர்தல் பொலீஸ் செயலகம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, குருநாகல், மாத்தறை, மொனறாகலை, நீர்கொழும்பு, கேகாலை, அநுராதபுரம், பதுளை, சிலாபம், கம்பளை, கண்டி ஆகிய பொலீஸ நிலையங்களிலேயே இம்முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### வெளிவாரி வணிகமாணி பரீட்சை முடிவு வெளியானது

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி வணிகமாணிக் கற்கையைப் பூர்த்தி செய்த 20 பேர் இம்முறை பட்டம் பெறவுள்ளனர். இவர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவின் போது பட்டச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

வெளிவாரி, வணிகமாணி இறுதி யாண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதன்படி 45 பேர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். அவர்களில் கற்கையைப் பூர்த்தி செய்த 20 பேருக்கு பட்டம் வழங்கப்படவுள்ளது.

பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் மற்றும் பட்டங்களைப் பெறவுள்ளவர்களின் விவரங்களை யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவில் பார்வையிடலாம் என உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகரன் தெரிவித்தார். (ஒ-9-7)

### 410 வேட்பாளர்கள் களத்தில்

# அம்பாறை வாக்குச் சீட்டு இரண்டு அடி நீளத்தில்!

அம்பாறை மாவட்டப் பொதுத் தேர்தலில் வாக்காளர்களுக்கு வழங்கப்படவிருக்கும் வாக்குச்சீட்டு சுமார் 2 அடி நீளத்திலிருக்குமெனக் கூறப்படுகிறது.27 சுயேச்சை அணிகள்,14 கட்சிகள் இம்மாவட்டத்தில் போட்டியிடுகின்றன. கடந்த (2001) தேர்தலில் 15 சுயேச்சை அணிகளும் 13 அரசியல் கட்சிகளும் போட்டியிட்டமை தெரிந்ததே. கடந்த தேர்தலில் 280 பேராகவிருந்த வேட்பாளர் எண்ணிக்கை இப்பொழுது 410 ஆக உயர்ந்திருக்கிறது.

இலங்கையில் அதிகூடிய சுயேச்சை அணிகள் போட்டியிடுகின்ற மாவட்டமாகவும் அம்பாறை திகழ்கின்றது. வாக்களிப்பதற்கான வாக்குச்சீட்டு நீளமாக இருப்பதால் வாக்குப் பெட்டிகளின் தொகையும் அதிகரிக்கப்படவுள்ளது. வாக்கெண்ணும் அலுவலர்கள் சிரமங்களை எதிர்நோக்க இடமுண்டு எனக் கூறப்படுகிறது.

27 சுயேச்சை அணிகளுள் 25 அணிகள் முஸ்லிம் சார்பானதாகவும், இரண்டு அணிகள் சிங்கள சமூகம் சார்ந்ததாகவும் உள்ளன.

# நோர்வூட்டில் பதற்றநிலை தணிந்தது; பொலீஸ் பொறுப்பதிகாரி இடமாற்றம்?

நோர்வூட் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த பதற்றநிலை ஓரளவு தணிந்துள்ளது. பாடசாலை மாணவி விமலாவின் அகால மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் நண் பகல் 12 மணிக்கு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று அதிகாலை ஆறு மணியுடன் நீக்கப்பட்டது.

கடைகள் நேற்றுக்காலை ஒற்றைக் கதவில் திறக்கப்பட்ட போதும் வழமையான ஜன நடமாட்டம் இல்லை. அரச போக்குவரத்துச் சபை பஸ்கள மட்டுமே சேவையில் ஈடுபட்டிருந்தன. தனியார் பஸ்கள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை .

இதனால் மஸ்கெலியா, பொகவந்தலாவை, பலாங்கொடை, சாமிமலை ஆகிய நகரங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகினர்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபின் அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினரும் விலகிச் சென்றனர்.

இதேவேளை, உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய நோர்வூட் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ஹற்றன் பிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் கூறினார்.

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.27

இளவாலை புனித ஹென்றியரசா கல்லூரியும் இளவாலை கன்னியர் மடம் வித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புனிதஹென்றியரசர் மைதானத்தில் இடம்பெறவுளளது.

இதில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் சு.மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார். (எ-ரி-48)

★ ★ ★

இடைக்காடு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ். சித்திரவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பளர் பி.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.(எ-ரி-69)

★ ★ ★

மண்டைதீவு,பெப்.27

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மென்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறை தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் கலந்துகொள்வார். (எ-ரி-88)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மென்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் தி.கிருஷ்ணகுமார் தலைமையில் பாடசாலை முன்றிலில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி பத்மநாதன் பராசக்தி கலந்துகொள்வார்.(எ-ரி-69)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.27

ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மென்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் சி.நாகையா தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வலி காம வலயக் கல்விப்பணிப்பாளர் திரு மதி றெஜனா இருதயநாதன் கலந்து கொள்வார். (எ-ரி)

★ ★ ★

சுழிபுரம்,பெப்.27

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எஸ்.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா கலந்துகொள்வார். (எ-ரி-28)

★ ★ ★

பருத்தித்துறை,பெப்.27

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை அதிபர் வே.புவனேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கல்விக் கழகப்பொறுபபாளர் து.கி.தாயகன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை ஆகியோர் இதில் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (எ-118)

★ ★ ★

குருநகர்,பெப்.27

கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயத்தின் இல்ல மென்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மா.ஞானபிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் யாழ்.வலயக் கல்வி அலுவலக உடற்கல்விப் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-51)

# கோபி அனானின் தொலைபேசியை பிரி. உளவாளிகள் ஒட்டுக்கேட்டனர்!

## முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு

லண்டன்,பெப்.27

ஈராக் போர் நடந்த கால கட்டத்தில் ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானின் தொலைபேசி உரையாடல்களை பிரிட்டிஷ் உளவுத்துறையினர் இரகசியமாக ஒலிப்பதிவு செய்துள்ள தகவல் இப்போது வெளியாகியுள்ளது. பிரிட்டனின் முன்னாள் பெண் அமைச்சரான கிளேர் சோட் என்பவரே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். அனானின் தொலைபேசி உரையாடல்கள் சிலவற்றின் எழுத்து வடிவத்தைத் தான் வாசிததாகவும் அவர் கூறியுள்ளார்.

பி.பி.ஸியின் செய்திச்சேவை நிகழ்ச்சி ஒன்றில் பேசியபோதே முன்னாள் அமைச்சர் இவற்றைத் தெரிவித்தார்.

ஈராக்மீது அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டுப்படையினர் போரைத் தொடங்க



முன்னரும், போர் ஆரம்பித்த பின்னருமான காலப்பகுதியில் கோபி அனான் தனது அலுவலகத்தில் இருந்து பேசிய தொலைபேசி உரையாடல்களைப் பிரிட்டிஷ் உளவாளிகள ஒலிப்பதிவு செய்தனர் என்றும் - ஈராக் போர் குறித்த ஐ.நாவின் நிலைப்பாட்டை அறியவே இந்த ஒலிப்பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார். (ஒ)

# புலிகளை ஆதரித்துப் பேசியமை குறித்த வழக்கிலிருந்து பழ.நெடுமாறன் விடுதலை!



திண்டுக்கல்,பெப்.27

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து பொதுக்கூட்டத்தில் பேசினார் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மீது தொடரப்பட்ட வழக்கில் அவரை விடுதலை செய்து திண்டுக்கல் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது.

1992ஆம் ஆண்டு தாண்டிக்குடியை அடுத்த பூலத்தூர் கிராமத்தில் தமிழர் தேசிய இயக்கத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது. அதில் பழ. நெடுமாறன் பேசினார். விடுதலைப் புலிகளை ஆதரித்தும், அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் வகையிலும் அப்போது பேசினார் என்று தாண்டிக்குடிப் பொலீஸார் நெடுமாறன் மீது வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கின் விசாரணை திண்டுக்கல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது நெடுமாறன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று கூறி அவரை விடுதலை செய்து தீர்ப்பு அளித்தார் நீதிவான்.

பழ. நெடுமாறனுக்கு நீதிமன்ற வாயிலில் அவரது இயக்கத்தினர் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

நீதிமன்ற வாயிலில் தொண்டர்கள் பட்டாசுகளை வெடிக்க வைத்துக் கொண்டாடினார்கள் தீர்ப்புக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தாலும், தம்மைப் பிணையில் செல்ல அனுமதித்து நீதிமன்றம் விதித்திருக்கும் கட்டுப்பாட்டின் அடிப்படையில் தம்மால் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்க இயலாது என்று பழ.நெடுமாறன் குறிப்பிட்டார்.

புலிகளை ஆதரித்துப் பேசிய விவகாரம் தொடர்பாக மேலும் பல வழக்குகள் பழ.நெடுமாறனுக்கு எதிரான நிலுவையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஹெய்ட்டியின் தலைநகர் எந்நேரமும் கிளர்ச்சியாளர்கள் வசம் வீழும்நிலை!

## யுத்தப்பீதியால் மக்கள் தப்பியோட்டம்!

போர்ட்-ஒவ்-பிரின்ஸ்,பெப்.27

ஹெய்ட்டியின் வடபுறத்தில் பெரும்பாலான பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருக்கும் கிளர்ச்சியாளர்கள். தலைநகர் போர்ட்-ஒவ்-பிரின்ஸ் மீது எந்நேரத்திலும் பெரும் தாக்குதலைத் தொடுக்கலாம் என்ற நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தச் சிக்கலில் சிக்காமல் தப்பித்துத் தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஜனாதிபதி அரிஸ்டிட்டின் ஆதரவாளர்கள் பலர் நாட்டைவிட்டு நழுவி வருகின்றார்கள்.

உள்நாட்டுச் சண்டையிலிருந்து தப்புவதற்காக நாட்டை விட்டு வெளியேறவிரும்பும் வெளிநாட்டவர்களின் கூட்டம் தலைநகர் விமான நிலையத்தில் அலை மோதுகின்றது.

இதேசமயம், இருதரப்புப் பிணக்கில் தங்களுக்கு ஆபத்து நேரலாம் எனக் கருதும் ஹெய்ட்டி மக்கள் பலர் கூட்டம் கூட்டமாக இந்தக் கரிபியன் தீவிலிருந்து கடல் மார்க்கமாகப் படகுகளில் வெளியேறி வருகின்றனர்.

ஹெய்ட்டி ஜனாதிபதி ஜேன் பேட்ரண்ட் அரிஸ்டிட் முன்னாள் மதகுரு.

1804இல் பிரெஞ்சுக் காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்ற ஹெய்ட்டியில், 1991இல் பதவியிலிருந்து அரிஸ்டிட் இராணுவச் சதி மூலம் துரத்தியடிக்கப்பட்டார். அப்போது ஏற்பட்ட குழப்பத்தில் 41ஆயிரம் ஹெய்ட்டி மக்கள் நாட்டை விட்டு ஓடித் தப்பவேண்டியதாயிற்று.

எனினும், அமெரிக்கா 1994இல் தனது இருபதாயிரம் துருப்புக்களை அனுப்பி மீண்டும் அரிஸ்டிட்டின் ஆட்சி ஏற்பட வழிசமைத்துக்கொடுத்தது.

ஆட்சிக்கு வந்த அரிஸ்டிட் உடனடியாக இராணுவப் படையைக் கலைத்தார். பொலீஸ் அமைப்பை உறுதியாக்கி, அதன் உதவியோடு நாட்டை நிர்வகித்தார்.

உலக அரங்கில்

அவரால் கலைக்கப்பட்ட இராணுவத்தின் அதிகாரிகளே இப்போது கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டு அவர்களுக்கு வலுச்சேர்த்திருக்கின்றார்கள்.

இராணுவத்தைக் கலைத்துவிட்டு பொலீஸாருடன் மட்டும் நிர்வாகத்தை நடத்தி வந்த அரிஸ்டிட்டினால், இப்போது இராணுவ ரீதியாகச் செயற்படும் கிளர்ச்சியாளர்களை வலுவான முறையில் எதிர்கொள்ள முடியாதிருக்கின்றது.

இராணுவ ரீதியில் செயல்படும் கிளர்ச்சியாளர்களுக்கு இராணுவ வலிமை இல்லாத உள்ளூர் பொலீஸாரால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. இதனால், பொலீஸ் நிலையங்களை இலகுவாகக் கைப்பற்றுவதன் மூலம் ஒவ்வொரு நகராகத் தமது கட்டுபாட்டுக்குளகொண்டு வருகின்றார்கள் கிளர்ச்சியாளர்கள்.

இப்போது அவர்கள் எந்நேரமும் தலைநக்ர் போர்ட்-ஒவ்- பிரின்ஸைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலைத் தொடுக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனினும், ஜனாதிபதி அரிஸ்டிட்டுக்கு ஆதரவான தனிப்படைகள், குழுக்களைச் சேர்ந்தோர் தலைநகர் வீதிகளில் ஆயுதங்களுடன் காணப்படுகின்றனர்.

கிளர்ச்சியாளர்கள் தலைநகருக்குள் புகுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு நகரின் எல்லைப்புற வீதிகளில் பழைய வாகனங்கள் போன்ற பாரிய பொருள்களைப் போட்டு வீதித் தடைகளை அவர்கள் அமைத்து வருகின்றனர்.

இதற்கிடையில் அதிபர் அரிஸ்டிட்டின் இளம் மகள்கள் இருவரும் அமெரிக்காவில் வசிக்கும் தமது தாத்தா, பாட்டியிடம் போய்ச்சேர்ந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஒ)

ஹெய்ட்டி தலைநகர வீதியில்.....



# கும்பகோணத்தில் நேற்று மகாமக உற்சவம் ஆரம்பம்

கும்பகோணம்,பெப்.27

தமிழகத்தின் கும்பகோணத்தில் 12 வருடங்களுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் மகாமகம் உற்சவம் நேற்று ஆரம்பமானது.

கும்பகோணத்தில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயம், ஆதிகும்பேஸ்வரர் ஆலயம், நாகேஸ்வரா ஆலயம், அபிமுகேஸ்வரர் ஆலயம் ஆகியவை உட்பட 12 புராதன சிவாலயங்களிலும், 5 வைஷ்ணவத் திருத்தலங்களிலும் நேற்றுக் கொடியேற்றப்பட்டு மகாமகம் திருவிழா ஆரம்பமாகியது.

முன்னதாகக் கங்கை, யமுனை போன்ற புண்ணிய நதிகளில் இருந்து தண்ணீர் எடுத்துவரப்பட்டு கும்பகோணம் சிவாலயங்களில் நவகன்னிகைகளுக்கு அபிஷேகம் நடத்தப்பட்டது. அந்த அபிஷேக நீர் நேற்றுக் காலை மகாமகக் குளத்தில் ஊற்றப்பட்டு விசேட பூஜைகள் நடத்தப்பட்டன.

மகாமகம் குளத்தில் 20 தீர்த்தக் கிணறுகள் உள்ளன. அவற்றுக்குள்ளும் புனித ஆறுகளின் நீர் ஊற்றப்பட்டது. மகாமகம் ஆரம்பிவிழாவில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கலந்து கொண்டார்.

இந்த உற்சவத்தின் பிரதான நிகழ்வான தீர்த்தவாரி நிகழ்ச்சி அடுத்த மாதம் 6ஆம் திகதி இடம் பெறவுள்ளது. அன்றைய தினம் இலட்சக்கணக்கான பக்தர்கள் மகாமகம் குளத்தில் புனித நீராடுவார்கள். மாசி மகத்திலன்று, வானோர்கள் இந்தக் குளத்தில் நீராடி கும்பேஸ்வரரை வழிபடுவார்கள் என்பது இந்துமத நம்பிக்கையாகும்.

வட இந்தியாவில் கங்கை ஆற்றில் கும்பமேளா கொண்டாடப்படுவதைப் போன்று தென்னிந்தியாவில் மகாமகம் கொண்டாடப்படுகிறது.(ஒ)



கிறிஸ்தவர்களின் விபூதிப் புதன் திருவிழாவை முன்னிட்டு, வத்திக்கான் நகரத் தேவாலயத்தில் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பருக்கு நெற்றியில் விபூதி இடப்படும் காட்சி இது. 'ஈஸ்டர்' திரு நாளுக்கு முன்னர் வரும் குருத்தோலைப்பெருநாளின் போது கிறிஸ்த வர்கள் இல்லத்தில் வைக்கப்படும் குருத்தோலையால் செய்யப்பட்ட சிலுவைகள் விபூதிப் புதனுக்கு முதல்நாள் சேகரிக்கப்பட்டு எரிக கப்பட்டுப் பெறப்படும் சாம்பலே, விபூதிப் புதனன்று பூசப்படுகின்றது.

# படகு மூழ்கி 30பேர் பலி!

துருக்கி நாட்டில் இருந்து படகில் சட்டவிரோதமாகப் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் குடியேறுகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. துருக்கியிலிருந்து இவ்வாறு ஏசியன் கடலில் ஒரு படகில் 30 பேர் சென்றுகொண்டிருந்தனர். அப்போது அந்தப் படகு புயலில் சிக்கிக் கவிழ்ந்தது.

இதனால், அந்தப் படகில் இருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 30 பேரும் கடலில் மூழ்கிவிட்டனர். இதுவரை 13 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அந்தப் பயணிகளிடம் ஏராளமான பணத்தை வாங்கிக் கொண்டு அவர்களை அழைத்துச்சென்ற படகோட்டி மட்டும் இந்த விபத்தில் உயிர் தப்பினார் என்று கூறப்படுகிறது. (ஒ)

# விமானம் வீழ்ந்து விமானி மரணம்!

ஜெயசல்மர்,பெப்.27

இந்தியாவின் ராஜஸ்தானில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய விமானப் படையின் போர் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதன் விமானி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவம் பொக்ரான் அருகே உள்ள ராணுவப் பயிற்சி மையத்தில் நேற்று வியாழக்கிழமை நடந்தது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள விமானப் படையின் சாகச நிகழ்ச்சிக்காக 'ஜாகுவார்'ரகப் போர் விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இந்த விபத்து நடந்தது. (ஒ)

# ரஷ்யாவில் தொடர் பூகம்பங்கள்!

மொஸ்கோ,பெப்.27

ரஷ்யாவில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை தொடர்ந்து 5தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இவை ரிசடர் அளவுகோலில் சராசரியாக 5.7 எனப்பதிவாகியுள்ளன.

ரஷ்யாவிலிருந்து வடகிழக்கே 300கிலோமீற்றர் தொலைவிலுள்ள கம்சட்கா தீபகற்பப் பகுதியில் இத்தொடர் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

உயிர், பொருள் சேதம் குறித்த தகவல்கள் ஏதும் உடனடியாகக் கிடைக்கவில்லை என்று ரஷ்யாவின் 'இடார்டாஸ்' செய்தி நிறுவனம் நேற்று மாலை தெரிவித்தது. (ஒ)

# 5 நாள்கள் தொடர் போராட்டத்தால் நேபாளப் பொருளாதாரம் பாதிப்பு

நேபாளத்தில் அரசுக்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்திப் போராடி வருகிறார்கள். இந்த நிலையில் நாடுமுழுவதும் ஹர்த்தால் போராட்டத்துக்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர். ஒரு நாள் அல்ல இருநாள் அல்ல 5 நாள்கள் இந்த முழு அடைப்புப் போராட்டம் நடக்கிறது. நேற்றுமுன்தினம் தொடங்கிய இந்தப் போராட்டம் நேற்று 2ஆவது நாளாக நீடித்தது.

வீதிகளில் வாகனப் போக்குவரத்து எதுவும் நடை பெறவில்லை. பாடசாலைகள் கடைகள் அனைத்தும் மூடியே கிடந்தன.

நேபாளத்தில் ஹர்த்தாலுக்கு ஒத்துழைக்காதவர்களைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விடுகிறார்கள். இன்றுடன் 3 நாள்கள் இந்த முழு அடைப்பு நடக்க உள்ளது. அவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இப்போதே ஏற்பட்டுவிட்டது. ஏழைநாடான நேபாளத்துக்கு 5 நாள்கள் தொடரும் இந்தப் போராட்டம் பெரும் பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

நேபாளத்தின் பிரதான வருமானம் சுற்றுலாத்துறை மூலமே கிடைக்கிறது. குறிப்பாக எவரெஸ்ட் உட்பட இமயமலைச் சிகரங்களில் ஏறுவதற்காக மார்ச் மாதம் தொடக்கம் வெளிநாட்டினர் அதிக எண்ணிக்கையில் நேபாளத்தில் குவியத் தொடங்குவார்கள்.

ஆனால், நீண்ட நாள்கள் தொடரும் இத்தகைய போராட்டங்கள் சுற்றுலாத்துறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று நேபாள அரசு அஞ்சுகிறது. (ஒ)

# காளகஸ்தி ஆலயத்தில் சுசிலா ஆஸ்தானப் பாடகியாக நியமனம்

பள்ளிப்பட்டு,பெப்.27

இந்தியாவின் ஆந்திரமாநிலம் சித்தூர் மாவட்டம் காளகஸ்தியில் புகழ்பெற்ற சிவன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலின் ஆஸ்தான பாடகியாகப் பிரபல பின்னணிப் பாடகி பி.சுசிலா நியமனம் செய்யப்பட்டார்.

இந்தக் கோயிலில் கடந்த சில நாள்களாக பிரம்மோற்சவ நிகழ்ச்சிகள் நடந்துவந்தன. கடைசி நாளன்று பல்லாக்கு சேவை நிகழ்ச்சி நடந்தது.

அப்போது பின்னணிப் பாடகி பி.சுசிலாவை கோயில் நிர்வாகிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். அவரை ஆஸ்தான பாடகியாக நியமித்ததாக அப்போது அறிவித்தனர்.

கண்ணப்பநாயனார் காளஹஸ்தியில் வாழ்ந்தார் என்பதும் -சிவலிங்கத்தின் கண்களில் இரத்தம் கசிந்தபோது, அவர் தனது கண்ணை இடந்து வைத்தது இந்தத் தலத்திலேயே என்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியையாகிய
**செல்வி வா.லலிதாம்பிகை** அவர்களின்
அன்புத் தந்தையாராகிய **வாமதேவன்** அவர்களது
மறைவுச்செய்தி அறிந்து எமது அன்புக்குரிய ஆசிரியைக்கும்
அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும்
இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.

*யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,*
*யாழ்ப்பாணம்.*
(சி-33464)(37-18-12-32)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

## வகுப்பறை மறுசீரமைப்பு

வலி.தென்மேற்கு,பெப்.27


பண்டத்தரிப்பு, சாந்தை சிற்றம் பலம வித்தியாலயத்தில் புதிய கல்வித் திட்டத்திற்கிணங்க ஆரம்பக்கல்வி வகுபபறை மறுசீரமைப்புச் செய்யப் பட்டுள்ளது.

கல்வித் திணைக்களம் ஒதுக்கீடு செய்த நிதி மூலம் இந்த மறு சீர மைப்புப்பணி மேற்கொள்ளப்பட்டதாக வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் தெரிவித்தார். இதேவேளை மேற்படி வித்தியாலயத்தில் ஜி.ரி.இசட். நிறுவ னத்தின் உதவித் திட்டத்தின் கீழ் மல சல கூடத்தொகுதி ஒன்றும் அண்மை யில் நிறுவப்பட்டுள்ளது. (எ-135)


யாழ். நகரில் வந்துவிட்டது!

**பிறேம் அற்ற (RIMLESS) மூக்குக் கண்ணாடிகள்**

ஆம்.........



**சொலெக்ஸ் ஒப்ரிகல்**



**&**

**டென்ரல் வேக்ஸ்**

உங்களுக்குப் புதிதாக, முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றார்கள். பிறேம் அற்ற (Rimless) கண்ணாடிகளையும் சண் கிளாஸ் வகைகளையும் யாழ். நகரில் இப்போது கொழும்பு விலைக்கே பெற்றுக்கொள்ளலாம்.

இத்துடன்,

- ✳ பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும், வசீகரமான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்,
- ✳ மிதப்புப் பற்களுக்கு இலகு முறையில் கிளிப் போட்டுச் சீர்செய்து கொள்ளவும்,
- ✳ மாபிள் கண்களைப் பெற்றுக்கொள்ளவும்,
- ✳ பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் நெல்லியடியில் சந்திக்கலாம்.

(சி-33463) (24-18-12-32)

T.P.: 222 7631

சொலெக்ஸ் ஒப்ரிகல்
வண்ணமாட லேன், நெல்லியடி.

சொலெக்ஸ் பல், மூக்குக் கண்ணாடியகம்
ஆஸ்பத்தி வீதி (OPD முன்பாக), யாழ்ப்பாணம்.



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2400559 இருந்து
2416935 வரை
சீட்டிழுப்பு இல. 1482
திகதி 25.02.2004




## வெற்றி எண்கள்

**09 14 15 21 37**

போனஸ் எண் **17**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.2,310,350/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,310,350/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 100 | 10,000/- | 1,000,000/- |
| 3 | 5,103 | 500/- | 2,551,500/- |
| 2 | 85,553 | 20/- | 1,711,060/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 09ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 104,820 | 10/- | 1,048,200/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,510,760/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

**ரூபா.3,120,300/-**

தொடர் இல. 3373502க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2004 பெப்ரவரி 28ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.


சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
தங்கப்பரிசு வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**2412316-2-80**
**2411850-1-29**
**2412891-8-79**
**2412896-6-38**
**2401755-2-35**

PHOENIX O&M


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1934 | 1999 |
| 07 | 02 |
| 03 | 22 |



## அமரர் சண்முகம் சோமசுந்தரம்

(முன்னாள் 'உதயன்' முகவர், சண்முகம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், குஞ்சர் கடை, கரணவாய்)

பாரினிலே எம்மை அன்பு என்னும் நீரூற்றி
ஆதரவு காட்டி அரவணைத்த அன்புத் தந்தையே!
சீறிச் சினந்தறியாத அமைதியின் உருவே - உந்தன்
நெஞ்சகலா நினைவுகள் சுமையாய் கனக்கவைத்து
நெடுந்தூரம் சென்றனையோ?
தென்றலாய் வந்தெமக்கு தெளிவாய்ப் பதில் சொல்வாய் தெய்வமே!
கடவுள் சேவடியில் கலந்த உன் ஆவி
சாந்தி பெற வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

*நீலன்குளத்தாள் லேன்,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*
(சி-33462)(32-18-12)

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி சோமசுந்தரம் (சோமு)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைய தம்பி சோமசுந்தரம் (சோமு) நேற்று (26-02-2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - காலஞ்சென்ற கதிராசியின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் இரத் தினதேவி, காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் சந்திரபாலன் (பிரான்ஸ்), செல்வராணி, தங்கராணி, (பிரான்ஸ்), யோகமலர், செல்வமலர் பாமா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாளற் (பிரான்ஸ்), சண் முகநாதன் (யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), திருவாதரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கணையசிங்கம், வின்சன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சாளினி, சருசினி, சருசன் (பிரான்ஸ்), கோபிகிருஸ்ணா, ஜெனனி (பிரான்ஸ்), திவ்யா, கணாதிபன் (கஜன்), நம்பியா, பிரவின், பிரதீப், பிரசாந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-02-2004) வெள்ளிக்கிழமை 12 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*68/7, மில்லேன்*
*பிரம்படி,*
*கொக்குவில்.*
(28986)(21-18-12-32)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி இரங்கநாதன் யோகாம்பிகை

ஸ்ரீவிக்னேஸ்வர வீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட யோகாம்பிகை 24.02.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குமரேசு இரங்கநாதன் (இளைப்பாறிய எழுதுநர் வலி. கிழக்கு பிரதேச சபை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வயிரமுத்து - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்தம்பி, காலஞ்சென்ற சின்னராசா அவர்களின் அன்புச் சகோதரியும் தயாபரன் (சுவிஸ்), சந்திரவதனி (கனடா), மாதினி (சுவிஸ்), கஜமுகன் (சுவிஸ்), சாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதர்சினி, பரந்தாமன், சிங்கம், ஞானாம்பிகை, சுரேஸ்குமார் ஆகியோரின் மாமியாரும் கஜந்தா, டெசிந்தன், கஜானா, கபீனா, எல்லாளன், நவீன், சூர்யா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2004) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக் காக அச்சுவேலி தெற்கு, முழங்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.No.0776002608 (சி-33459)(37-18-12-32)

தகவல்:
இரங்கநாதன்
(கணவர்).

## சின்னத்துரை வியாகேசன் (பிள்ளையார்)

(ஊழியர், தெல்லிப்பழை ப.நோ.கூ.ச.)

கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி கோவிலடி உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை வியா கேசன் 26.02.2004 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்துரை - அமரர் கதிரமலை தம்பதிகளின் மகனும் சுப்பிரமணியம் - தங்கரத்தினம் தம்பதிகளின் மருமகனும் ரதியின் பாசமிகு கணவரும் காயத்திரி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), விஸ்னு காந்தன், கோபிகாந்தன் (மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2004) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3.30 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகமூர்த்தி கோவிலடி,*
*உடுவில்.*
(28983)(37-18-12-32)

தகவல் :
மனைவி,
பிள்ளைகள்.

உதயன்

# எச்சரிக்கை அறிவிப்புக்கு காரணங்கள் உண்டு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள வாக்காளர்கள் தமது வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகிக்கும் விடயம் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கொழும்புக்கான நோர்வேத் தூதுவருடன் பேச்சு நடத்தியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுத் தரப்புக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் நோர்வேத் தரப்பு அனுசரணைப் பணி வகிப்பதால் இந்த இருவரும் இவ்விடயம் குறித்து நடத்திய பேச்சு முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுமானால் விபரீதமான விளைவுகள் ஏற்படும் என்று இச்சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களுடன் உரையாடிய சமயம் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

அப்படி அவர் எச்சரிக்கை விடுத்ததில் அர்த்தங்கள் நிறையவே உள்ளன.

கடந்த தடவை - இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் - தமிழ் மக்களுக்கு நேர்ந்த அனுபவத்தின் அடிப்படையில்தான் - பட்டறிவின் பின்னணியில்தான் - இந்த விவகாரத்தை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கடந்த தடவையும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தைச் சேர்ந்த வாக்காளர்கள், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து வாக்களிப்பதற்காகக் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் - இராணுவத் தடைநிலைகளுக்கு அப்பால் - கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், இராணுவத் தரப்பு திட்டமிட்டுச் செயற்பட்டு அந்தத் தமிழ் வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்து அதில் வெற்றியும் கண்டது. வாக்காளர்கள் என்ற போர்வையில் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவத் திட்டமிட்டிருக்கின்றார்கள் எனத் தங்களுக்குப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்ற 'நொண்டிச்சாட்டுக்' காரணத்தைக் கூறி, தடை நிலை வாசல்களை அன்று முழுவதும் மூடிவைத்தது இராணுவம். அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறித்தது.

இராணுவத்தின் இந்த நடவடிக்கை பின்னர் உயர்நீதிமன்றத்தினால் பலத்த கண்டனத்துக்கு உள்ளானது. அதுமட்டுமல்ல, இந்நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திடம் மனுச்செய்த நான்கு தமிழ் வாக்காளர்களுக்குத் தமது சொந்தப் பணத்திலிருந்து தலா ஐம்பதினாயிரம் ரூபா செலுத்த வேண்டியவரானார் இராணுவத் தளபதி.

ஆனால், அதற்கு அப்பாலும் ஒரு விடயம் உண்டு.

இந்தமுறைத் தேர்தலின் பின்னர் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழர் தரப்பே வரும் என்று கருத்துக் கணிப்புகள் இப்போதே கட்டியம் கூறுகின்றன.

ஆனால், கடந்த தடவை பொதுத்தேர்தலில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களின் தமிழ் வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்தால், ஆட்சியைத் தீர்மானிக்கும் வாய்ப்பு கடந்த தடவையே தமிழர் கைக்கு வந்திருக்கும்.

போன தடவை நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையாக ஐ.தே.கட்சி அரசுக்கு ஒரேயொரு எம்.பியின் ஆசனமே கூடுதலாகக் கிடைத்தது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருப்பார்களேயானால் இந்த 'அரும்பொட்டு' பெரும்பான்மையை ஐ.தே.மு. அரசு பெற்றிருக்காது என்பது நிச்சயம். அப்போது 15இற்கும் அதிக எம்.பிக்களை வைத்திருக்கும் நிலையில் இருந்திருக்கக்கூடிய தமிழ்க் கூட்டமைப்பே ஆட்சியைத் தீர்மானிக்கும் கட்சியாக வந்திருக்கும்.

அதேநிலைமை மீண்டும் வரக்கூடிய சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

தமிழர் தரப்புக்கு அதே வாய்ப்புக் கிடைப்பதைத் தடுப்பதற்கு பேரினவாதம் மீண்டும் அதேபோன்ற ஒரு முயற்சியில் இறங்கும் சாத்தியங்கள் அதிகம் உண்டு.

அதை உணர்ந்தே முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றார் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழரின் அரசியல் ஐக்கியமும், உறுதியும் பேரினவாதிகளின் வயிற்றை இப்போதே - தேர்தல் முடிவுகள் வரமுன்னரே - கலக்க வைத்துள்ளன. ஒற்றுமைப்பட்ட தமிழரின் பலம் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிப்பதைத் தடுக்க எத்தகைய திரைமறைவு வேலையையும் செய்வதற்கு சிங்களப் பேரினவாதம் தயங்காது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

# மக்களுக்கு மருத்துவ அறிவூட்டித் தெளியவைக்க மிகப்பிரமாண்டமான அளவில் கண்காட்சி

## யாழ். மருத்துவபீடத்தில் மார்ச் 5முதல் ஐந்து நாள்கள்

யாழ்ப்பாணம்,பெப்.27

எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதிமுதல் 9ஆம் திகதி வரை மருத்துவபீட மாணவர்கள் நடத்தும் மருத்துவக் கண்காட்சி ஒன்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் வெள்ளி விழாவை யொட்டி இக்கண்காட்சி பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மிகப்பிரமாண்டமான முறையில் பல்வேறு முக்கிய விடயங்களை - அம்சங்களை - உள்ளடக்கி நடைபெறவுள்ள இக்கண்காட்சிக்கான ஆரம்பக்கட்டப் பணிகளில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் இப்போது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. மிகநீண்டதோர் இடைவெளியின் பின்னர் தமிழ்மொழி மூலமாக நடத்தப்படவுள்ள மிகப்பெரிய கண்காட்சியாகவும் இது அமைவதால் முக்கியத்துவம் பெறுகிறது.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் கடந்த 20 வருட கால யுத்தத்தின் பின்னர் இப்போது ஓர் இடைக்கால அமைதி நிலவுகின்றது. கடந்த யுத்த காலத்தில் குடாநாட்டு மக்கள் பலதத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டார்கள். அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருள்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவியது. எனினும், யுத்தத்தினாலேயே உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. ஆனால், தற்போது புதிய கொடிய நோய்கள், வீதி விபத்துகள், வெடிபொருள்கள் காரணமாக அன்றாடம் உயிர்கள் பறிக்கப்படுகின்றன. இவற்றுக்கு ஒரு முற்றுப் புள்ளிவைத்து மனித உயிரின் மகிமையை மக்களுக்கு உணர்த்துவதே இக்கண்காட்சியின் பிரதான நோக்கமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னர் யுத்த காலத்தில்தான் நாம் உயிர்களைப் பறிகொடுத்தோம் என்றால், ஏன் சமாதான காலத்திலும் அவ்வாறு நடைபெறவேண்டும். இவற்றைக் கட்டுப்படுத்தச் சரியான வழிகாட்டுதல்கள் இல்லை. அதனால்தான் இந்த மருத்துவக் கண்காட்சி என்கிறார்கள் அதன் ஏற்பாட்டாளர்கள்.

### முழு ஒத்துழைப்பு

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் முழுமையான பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுவரும் இக்கண்காட்சிக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், மருத்துவபீட ஆசிரியர்கள் ஆகியோர் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர்.

கொழும்பு மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவனப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி லலிதா மெண்டிஸ் இக்கண்காட்சியைத் திறந்து வைக்கவுள்ளார்.

உடற் சுகம், உளச் சுகம், சமூக சுகம், ஆன்மீகச் சுகம் ஆகியவற்றை உள்ளடக்கி அமையவுள்ள இக்கண்காட்சியில் நோய்த் தடுப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள், தாய்மார்கள், வர்த்தகர்கள் ஆகியோர் உட்பட மக்கள் சமூகத்தின் பல தரப்பினருக்கும் பயனுள்ள தகவல்களை இக்கண்காட்சி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உடல் அமைப்பின் விசித்திரம், உடல் தொழிற்பாட்டின் மகத்துவம், தாய்மார் பராமரிப்பு, வயோதிபத்தின் மகிமை, நவீன நோய்த்தடுப்பு, குழந்தைச் செல்வத்தின் பெறுமதி, தொற்று நோய்கள், புற்று நோய்கள் என்பன குறித்த பல வித்தியாசமான மருத்துவ விளக்கங்களையும் தகவல்களையும் இக்கண்காட்சியின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### மக்கள் தெளிவடைய உதவும்

இதுவரை காலமும் தென்னிலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களிலேயே இப்படியான பிரமாண்டமான மருத்துவக் கண்காட்சிகள் நடைபெற்றுவந்தன. அவையும் தமிழ் மொழியில் நடைபெறவில்லை. அத்தகைய மருத்துவக் கண்காட்சிகளில் குடாநாட்டு மக்கள் கலந்துகொள்ளக் கூடிய வாய்ப்புகளும் இருக்கவில்லை. இதனால், எமது மக்கள் மத்தியில் மருத்துவ ரீதியான நிலைப்பாடுகளில் பல முரண்பட்ட கருத்துக்களும் அபிப்பிராயங்களும் நிலவுகின்றன. இவற்றில் எமது மக்கள் ஒரு தெளிவான நிலையை அடையவேண்டும் என்ற உயரிய நோக்குடனேயே இக்கணகாட்சியைத் தாம நடத்துவதாக மருத்துவபீட மாணவர்கள் தெரிவித்தனர்.

மருத்துவக் கண்காட்சி பின்வரும் பிரதான பிரிவுகளைக் கொண்டதாக அமையவுள்ளது.

- ★ இனப்பெருக்கத் தொகுதி
- ★ உடற்கல்வி மருத்துவம்
- ★ உணவுக்கால்வாய்த் தொகுதி
- ★ சுற்றோட்டத் தொகுதியும், அவசர சிகிச்சையும்.
- ★ அகச்சுரப்பித் தொகுதியும், நீரிழிவும்.
- ★ சட்ட மருத்துவம்
- ★ கண், காது, மூக்கு, தொண்டை மருத்துவம்.
- ★ நரம்பியல், உள மருத்துவம்.
- ★ சுவாசத் தொகுதி.
- ★ சிறுநீரகத் தொகுதி
- ★ சுகாதாரமும், ஆரோக்கியமும்
- ★ பாம்புக்கடி
- ★ வெடிபொருள்கள் தொடர்பான விழிப்புணர்வு
- ★ போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு

### சுகாதார அமைச்சும் உதவும்

இக்கண்காட்சியின் விசேட அம்சமாக சுகாதார அமைச்சும் சில பிரிவுகளை அமைத்து பங்களிப்புச் செய்யவுள்ளது. நவீன மருத்துவமுறை, மருத்துவச் செயற்பாடுகள் தொடர்பான வீடியோ படக்காட்சிகளும் இங்கு காண்பிக்கப்படவுள்ளன.

இக்கண்காட்சியைப் பார்வையிடுவதற்கென மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்தும் பொதுமக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுக்கான அடிப்படை வசதிகளும் மருத்துவபீட மாணவர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை இக்கண்காட்சி நடைபெறவுள்ளதாகவும், மாலை 5மணியுடன் நுழைவுச்சீட்டுக்கள் வழங்குவது நிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. பெருமளவான நிதிச் செலவுடன் ஏற்பாடுசெய்யப்பட்ட இக்கண்காட்சியை மிகச் சிறந்தமுறையில் ஒழுங்கமைப்புச் செய்வதற்கு மருத்துவபீடத்தின் வழமையான செயற்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டு மருத்துவ மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கண்காட்சி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். இது வெறும் கண்காட்சியாக மட்டுமல்லாது மருத்துவபீட மாணவர்களின் கல்வி முறையாகவும் அமைவதால் பல அரிய தகவல்களையும் விளக்கங்களையும், இதில் கலந்துகொள்வோர் பெற்றுக்கொள்ள முடியுமென மருத்துவபீட பேராசிரியர்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தனர்.

மொத்தத்தில் மருத்துவம் தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி அமையவுள்ள இக்கண்காட்சியை அனைத்துத் தரப்பினரும் தவறாது கண்டுகொள்வதன் மூலம் மருத்துவரீதியான அறிவில் எமது மக்கள் உன்னதநிலையை அடைய முடியுமென அதன் ஏற்பாட்டாளர்களான மருத்துவ மாணவர்கள் தெரிவித்தனர்.

யாழ். மருத்துபீடத்தினர் நடத்தும் இந்தக் கண்காட்சிக்கான ஊடக அனுசரணையை உதயன் நிறுவனம் வழங்குகின்றது. (ம-8)

# சனசமூக நிலையத்தை மீள இயக்க முட்டுக்கட்டை

வலி.வடக்கு,பெப்.27

யாழ். தட்டாதெருச்சந்தியில் உள்ள கலாஜோதி சனசமூக நிலையத்தை மீள இயக்குவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி மறுத்து வருவதாகப் பொதுமக்களும், சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் புகார் தெரிவித்துள்ளனர்.

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வைத் தொடர்ந்து இப்பகுதியில் பாரிய இராணுவமுகாம் அமைக்கப்பட்டதுடன், பொதுமக்களைச் சோதனை செய்வதற்கு இந்தக் கட்டடம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

கடந்த ஆண்டு இப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையினரில் ஒரு பகுதியினர் வெளியேறியதைத் தொடர்ந்து சனசமூக நிலையம் நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து சனசமூக நிலையத்தை மீள இயங்கச் செய்வதற்கு நிர்வாகத்தினர் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து மீண்டும் அப்பகுதியில் முட்கம்பிகள் போடப்பட்டு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சனசமூக நிலையத்தை மீள இயக்குவதற்கு அனுமதிக்க வேண்டும் எனக் கோரிப் பொதுமக்கள் மகஜர்களை அனுப்பிய போதிலும் இது வரை உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறப்பட்டது. (எ-86)

### நாளை

மாசி 16
சனிக்கிழமை
(28.02.2004)
திதி : அட்டமி
இரவு 10.41 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பின்னிரவு 2.13 வரை
சுபநேரம்: 3.29-4.59
ராகுகாலம்: 9.29-10.59
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பயணம் அறிவாளிகளை மேதைகள் ஆக்கும்.

# அந்திரான் வாய்க்காலை மூடிவிடுவதற்கு சிலர் முயற்சி

## விவசாய சம்மேளனம் முறைப்பாடு

வலி.தென்மேற்கு,பெப்.27

பண்டத்தரிப்பிலுள்ள தவிட்டுக்குளத்தையும், வடலியடைப்பிலுள்ள துலாவைக்குளத்தையும் இணைக்கும் பழைமைவாய்ந்த வாய்க்காலான அந்திரான்வாய்க்காலை மூடுவதற்குச் சிலர் முயற்சி செய்துவருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி நடவடிக்கை எடுக்குமாறுகோரி பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதங்களையும் அனுப்பிவைத்துள்ளது.

மாரி மழைகாலங்களில் ஏற்படும் மிதமிஞ்சிய வெள்ளம் இந்த அந்திரான்வாய்க்கால் வழியாகச்சென்று வடலியடைப்பு - சங்கானை - வட்டுக்கோட்டை - சங்கரத்தை ஆகிய இடங்களுக்கு ஊடாகச்சென்று வழுக்கையாற்றில் கலந்து பின்னர் அராலிக் கடலில் சங்கமிக்கின்றது.

இவ்வாறு நீண்டதூரத்துக்குச் சென்று விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படும் வாய்க்காலை தமது சுயதேவைகளின் நிமித்தம் மூடிவிடுவதற்குச் சிலர் முயற்சித்து வருகின்றனர் எனக்கூறப்பட்டது.

இதற்கிடையில், அண்மையில் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டதிலும், பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவரால் இது விடயமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது தொடர்பாக, உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த உதவிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (எ-135)

# பிரிட்டனில் யாழ். இளைஞர் மர்மமான முறையில் மரணம்!

## உணவில் நஞ்சு கலக்கப்பட்டதாகச் சந்தேகம்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ். இளைஞர் ஒருவர் பிரிட்டனில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், மாட்டின் லேனைச் சேர்ந்த செல்வலிங்கம் பாஸ்கரலிங்கம் (வயது 27) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

நஞ்சு கலந்த உணவு உட்கொண்டமையே இவரது மரணத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று பிரிட்டனிலுள்ள உறவினர்கள் சந்தேகிக்கின்றனர். இதற்கிடையில் இது தொடர்பான விசாரணைகளைப் பிரிட்டன் பொலீஸார் ஆரம்பித்துள்ளனர்.

சம்பவதினம் அங்குள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று உணவருந்திய சிறிது நேரத்தில் அவர் அங்கேயே உயிரிழந்ததாக அவரது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரது சடலத்தை கொழும்புக்கு எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனக்கூறப்பட்டது. (எ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

478, பிரதான வீதி, கொழும்புத் துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த அயூக்கா பாத்திமாபி என்பவருடைய குடும்பப்பதிவு அட்டை, நிவாரண அட்டை என்பன பரமேஸ்வராச் சந்திக்கும் குமாரசாமி வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் து.காண்டீபன், 50, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.(28980)

ஒரு பவுண் நிறையுடைய தங்க மோதிரம் பிரதான வீதியில் மாட்டின் ரோட் சந்தியிலுள்ள கராஜ்'க்கு முன பாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.01, மாட்டின் வீதி, சின்னவன் என்பவரிடம் ஒப்படைத்துதவவும். (28962)

சுகந்தன் என்பவருடைய Hero Honda மோட்டார் சைக்கிளுக்குரிய சகல ஆவணங்களும் மற்றும் சிம்காட் (0776 264212) என்பன தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.222 7275, 0776103235. (28959)

Nokia 3360 மொபிட்டல் இணைப்புடனான கையடக்கத் தொலைபேசி 25.02.2004 அன்று திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் இஅன்ரன் பிளசம்ஸ், O.L.R சேச் ரோட், உரப்புலம், ஆனைக்கோட்டை.T.P.:0712-370 466. (28954)

### விற்பனைக்கு

கேபிள் இணைப்புடனான தொலைபேசி இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777-030015. (28953)

பாவித்த நல்ல நிலையிலுள்ள போட்டோப்பிரதி எடுக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: து.ரவீந்திரன், இல.70, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.(28957)

### வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகம் புரியும் மூன்று பேர்கொண்ட குடும்பத்தினருக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. கோண்டாவில், இருபாலை அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது. தொடர்பு: M.சீலன், C/o M.ரவீந்திரராஜ், 4ஆம் கட்டை, இருபாலைச் சந்தி, கோப்பாய். (28900)

### மணமகள் தேவை

யாழ். உயர்குலத்தைச் சேர்ந்த 1960 ஆனி 25 இல் பிறந்த, புனர்பூசம் 2ஆம் பாதம், பிரான்ஸில் பிரஜாவுரிமையுடையவருக்கு படித்த, அழகிய, தொழில் புரிகின்ற, 1968 இற்கு பின் பிறந்த மணமகள் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். வி.இல.2181, மே/பா உதயன்.(28968)

1972 ஆம் ஆண்டு, 8 இல் செவ்வாய், லண்டன் மணமகனிற்கு அழகான மணமகள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும் துர்க்கா திருமண சேவை, 101/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி (K.K.S. வீதி), யாழ்ப்பாணம். பதிவுக் கட்டணம் யாவும் இலவசம். (28975)

### வகுப்பறைத் தொகுதி திறந்துவைப்பு

ஜப்பான் நாட்டின் பாஜ் நிறுவனத்தினால் இயக்கச்சி அரச தமிழ்க் கலவன் பாடசாலையில் 5லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிக்கட்டடம் அண்மையில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி இராசம்மா இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பளைக் கோட்டக் கல்வி அலுவலர் அகைவைபிள்ளை உட்படப் பலர் கலந்துகொண்டனர். பளைக் கல்விக் கோட்டத்தில் தம்பகாமம் அ.த.க. பாடசாலை, சோரன்பற்று கணேசாவித்தியாலயம் ஆகிய வற்றிலும் மேற்படி நிறுவனம் வகுப்பறைத் தொகுதிகளை அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (எ-117)

சாரு எலெக்ரோனிக்
பலாலி வீதி, கோண்டாவில்
உங்கள் வீட்டின் T.V. Radio, CD, VCR, DVD, Computer monitor மற்றும் சகலவிதமான எலக்ரோனிக் பொருள் களையும் சிறந்த முறையில் உத்தரவாதம் நம்பிக்கையுடன் திருத்திப் பெற்றுக்கொள்ள:
சாரு எலெக்ரோனிக்
பலாலி வீதி, கோண்டாவில்
தொலைபேசி: 077-6153725

# குழாய்க்கிணறு பழுது பயனாளிகள் சிரமம்

தெல்லிப்பழை,பெப்.27

ஏழாலை மேற்கு, சிவகுரு வீதி, லெனின் சனசமூக நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறு பழுதடைந்துள்ளதால், இப்பகுதிப் பொதுமக்கள் குடிதண்ணீருக்காகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

இந்தக் குழாய்க் கிணறு உள்ள சூழலில் காணப்படும் கிணறுகள் உவர்நீர்க் கிணறுகளாகவே உள்ளன. மேலும், இடம்பெயர்ந்து தற்காலிக வதிவிடங்களில் வசிக்கும் குடும்பங்களே இந்தப் பகுதியில் அதிகளவில் வசிக்கின்றனர் என்பதும் -

இவர்கள் அனைவரதும் குடிதண்ணீர்த் தேவையை இந்தக் குழாய்க் கிணறே பூர்த்திசெய்து வந்தது என்பதும் - குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்று இந்தக் குழாய்க் கிணற்றை அமைத்து வழங்கியிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் குழாய்க்கிணற்றைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-150)

# சாவகச்சேரியில் முஸ்லிம்கள் மீளக்குடியமர ஏற்பாடு

தென்மராட்சி,பெப்.27

சாவகச்சேரிப் பகுதியில் மீளக் குடியமரும் முஸ்லிம் குடும்பங்களை சாவகச்சேரி முஸ்லிம் பள்ளிவாசலுக்குச் சொந்தமான காணிகளில் குடியமர்த்தப் பள்ளிவாசலில் தர்மகர்த்தா சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள சாவகச்சேரி கச்சாய் வீதியிலிருந்து தனங்களப்பு வீதிவரை உள்ள பள்ளிவாசலுக்குச் சொந்தமான காணிகளில் முதற்கட்டமாக இவர்கள் மீள்க் குடியமர்த்தப்படவுள்ளனர் என்றும் -

முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு வசதியாக இந்தக் காணிகளை பள்ளிவாசல் தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்குமாறு கோரி ஜனாதிபதி, பிரதமருக்கு மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும்-தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், சாவகச்சேரி நகரப் பகுதியில் சொந்தக்காணி உள்ள முஸ்லிம்களில் சிலர் மீளக்குடியமர்வதற்காகத் தமது விடுகளைப் புனரமைத்து வருகின்றனர்.

இதேவேளை, யுத்தத்தினால் சேதமடைந்துள்ள சாவகச்சேரி பள்ளிவாசலைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. (எ-117)

### விக்கிரகம் திருட்டு!

யாழ்ப்பாணம்,பெப்.27

சுவினை மீனாட்சி அம்மன் ஆலயத்திலே பிள்ளையார் எழுந்தருளி விக்கிரகம் திருடப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்தியிலிருந்து நிலாவரை நோக்கிச் செல்லும் வீதியில் குடிமனைகள் குறைவாகவுள்ள பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை இரவு மேற்படி விக்கிரகம் திருடப்பட்டது. (ம-69)



புதிய கணனி வகுப்புகள்
Diploma in Computer Accounting
Diploma in Desktop Publishing
Diploma in Hardware Engineering
Diploma in MS Office
Start: 02/03/2004
மேலதிக விபரங்களிற்கு
STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674

### விவிலிய வினாடிவினா, பேச்சுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா

இடம்: யாழ். YMCA மண்டபம்
காலம்: 28ஆம் திகதி சனிக்கிழமை 2004
நேரம்: மாலை 3.30மணிக்கு (பு.நே.)

**விசேட நிகழ்வுகள்**

நாடகம்: அனைத்தும் அவரே (திருமறைக்கலாமன்றம்)
நாடகம்: பட்டமரம் (பரி.யாக்கோப்பு ஆலயம், நல்லூர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(சி-33458) (14-26) - YMCA, யாழ்ப்பாணம்.

We Serve

வலய ரீதியாக லயன்ஸ் கழகங்கள் தீவகம், வட்டுக்கோட்டை, நல்லூர், கொக்குவில், கோப்பாய் இணைந்து நடத்தும்

### விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண்பரிசோதனை முகாம்

**29.02.2004 ஞாயிறு காலை 8மணி (பு.நே.)**
**இடம்: நடராசா வித்தியாலயம் (வேலணை மேற்கு)**

கண்பரிசோதனை மேற்கொள்பவர்

யாழ்.போதனா வைத்தியசாலை கண்சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி S.குகதாசன் அவர்கள்.

விழிவெண்படலத்தால் (கற்றாக்) பாதிப்புள்ளவர்களை மட்டும் பரிசோதனை செய்து (கற்றாக்) சத்திரசிகிச்சை செய்துகொள்ள வேண்டியவர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ள ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும். அத்துடன், கண்ணாடி வில்லை தேவைப்படின் பெற்றுக்கொடுக்கப்படும்.

குறிப்பு: முகாமிற்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகைதந்து வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர், ஊர்காவற்றுறை தீவக மக்கள் அனைவரையும் பயன்பெற வேண்டுகின்றோம்.

லயன் டாக்டர் சதாசிவம்
வலயத் தலைவர்.

லயன் டாக்டர் நவமலர் கனகரட்னம்
பிராந்தியத் தலைவர், பிராந்தியம்-08

லயன் டாக்டர் K.இராஜரெட்னம்.
மாவட்டத் தலைவர்
(கண்ணிற்கு முதலிடம்) மாவட்டம் 306B.

லயன் S.S.தங்கராஜா,
மாவட்ட இணைப்பாளர்(வடக்கு),
மாவட்டம் 306B.

(C/33456) (35-14-19-26)

# நீங்கா நினைவில்...



திருமதி அரியமலர் சிவராசா

எங்கள் குடும்பத் தலைவியே! அருமை மம்மியே!
அரியமலராக முகிழ்ந்து சிவராசனொடு மலர்ந்தாய்
நவரத்தினங்களைப் பெற்று நலமுறவே வாழ வைத்தாய்
அன்புப் பிணைப்பாலே அனைவரையும் கவர்ந்திழுத்தாய்
மம்மியே உன் பொலிந்த மேனியும் மலிந்த புன்சிரிப்பும்
கனிவான உள்ளமும் கருணைப் பார்வையும்
அணைத்த கரங்களும் நாம் இனி என்று காண்போம்?
நீக்கதியாவோம் நிம்மதி இழந்தோம்!
நற்கதி நீ பெறவே நாம் என்றும் துதிப்போமே!

'சிவபதி',
14/1, விதானையார் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(28956) (26-19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
28
09
1980



அக்கினியின் அழிப்பில்
10
03
2003

### திருமதி அஜீவன் வினோதினி

திதி: 27-02-2004

வானிருக்கும் வினோ
நீ பெறுக சாந்த!

கண்ணுற்றுக் காதலகம் கனிந்து கன்னிக் கால்
கண்ணுற்றுக் காதலகம் கனிந்து கன்னிக் கால்
எண்ணுற்ற காலம் ஏக எமன் வந்து உனமேற,
புண்ணுற்ற பூவுடல் விட்டு
விண்ணுற்றாய் வினோ!

பாராதுன் முகத்தைப் பகலிரவாய் பாலன் விழி தேட,
ஊரார் பெற்றோரோடு உடன் பிறந்தோர் நெஞ்சோட,
தீராத துன்பத் தீயிட்டாய்! தினமும் சோக விடியலானது.
நாளை தவிர்த்து நம் பாலன் உனை – கேட்கும்
வேளை மட்டும் நீ வந்துவிடு – அது வரையும்
நான் காப்பேன் அவனை உன் நினைவில் – ஆதலினால்
வானிருக்கும் வினோ
நீ பெறுக சாந்தி!

கற்பகக்குணை,
கந்தரோடை,
சுன்னாகம்.

(28977)(37-14-26)

உன் பிரிவால் துயருறும்:
கணவர்,
மகன் (விதுஷன்).

# மரண அறிவித்தல்

### செல்வலிங்கம் பாஸ்கரலிங்கம் (ஜெகன்)

(யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவன்)

யாழ்ப்பாணம், மாட்டின் லேனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் செல்வலிங்கம் பாஸ்கரலிங்கம் 22.02.2004 அன்று லண்டனில் அகாலமரணமானார்.

அன்னார் செல்வலிங்கம் (கடை) - தனபாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - பொன்னு, மருதடியான் - அன்னம்மா அவர்களின் அன்புப் பேரனும் மதன், சுதன் (பிரான்ஸ்), அனுசியா, உத்தமன், சஞ்ஜீவலிங்கம், ராஜலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வத்தளையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No.9, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.
T.P.: 0112 948240

தகவல்:
(28974)(35-12-14-26) யோ.தர்சினி (சித்தி).

# தரமான பொருள்களையே விற்பனை செய்வது நாட்டுக்குச் சிறந்த சேவை

## அதன் மூலம் வெற்றிக்கு வழிபிறக்கும் என்கிறார் தொழிலதிபர் பீற்றர் பொன்சேகா

*கேள்வி:* உங்கள் வியாபாரம் தொடங்கிய காலகட்டத்தை பற்றி விவரிக்க முடியுமா?

*பதில்:* 1980 ஆம் ஆண்டிலேயே நான் இந்த வியாபாரத்தை ஆரம்பித்தேன். அந்தக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதிசெய்ய ஆரம்பித்தேன். அந்தக் காலகட்டத்தில்தான் ஜப்பான் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களையும் இறக்குமதிசெய்ய ஆரம்பித்தேன்.

*கேள்வி:* வாகனங்களை இறக்குமதி செய்வதை விடுத்து உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கான காரணம் என்ன?

*பதில்:* நான் அந்தக் காலகட்டத்தில் பிரவுன் கம்பனியில் பொறியியற தொழில்நுட்பப் பகுதியில் பொறுப்பாளராகக் கடமையாற்றினேன். எனவே உதிரிப்பாகங்களுக்கு இலங்கையில் உள்ள தட்டுப்பாடு பற்றி நன்கு அறிவேன். எப்படியான உதிரிப்பாகங்களுக்கு சந்தைவாய்ப்பு உள்ளது என்பதுபற்றியும் தகவல்களைச் சேகரித்து, அந்த உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யத் திட்டமிட்டேன்.

*கேள்வி:* பெரும்தொகையான இலங்கையர்கள் இத்துறையில் ஈடுபட்டிருக்கின்றனர். எனவே, இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களை விற்பதில் சிக்கல்கள் தோன்றவில்லையா?

*பதில்:* நாம் இத்துறையை ஆரம்பித்தபோது பழைய வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களை யாரும் இறக்குமதி செய்யவில்லை. அதேசமயம் எமது வியாபாரம் தலை நகரைக் கொண்டதாக இருக்கவில்லை. வெளிமாவட்டங்களிலேயே எமது உதிரிப்பாகங்களுக்குப் பெரும் சந்தை வாய்புக் கிட்டியது. எனவே, இதில் எவ்வித சிக்கலும் தோன்றவில்லை.

*கேள்வி:* நீர்கொழும்பு செலான் வங்கியில் வாடிக்கையாளராக இருக்கும் நீங்கள், அந்தக் கிளையின் சிறந்த வாடிக்கையாளர் எனவும் கூறுகிறார்கள். அதுபற்றி ஏதாவது கூறமுடியுமா?

*பதில்:* நான் அந்த வங்கியில் பணத்தை வைப்பிலிட்டு வாடிக்கையாளராகச் சேர்ந்துகொண்டதற்குக் காரணம் அதன் முகாமையாளர் ஆவார். அவரின் ஆலோசனைகள் எமது வியாபாரத்துக்கு மேலும் உறுதுணையாக இருந்தன.

*கேள்வி:* நீங்கள் சீனாவிலிருந்தும் உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்கின்றீர்களா?

*பதில்:* இலங்கையில் பெரும்பாலான வர்த்தகர்கள் சீனாவிலிருந்து வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்கின்றனர்.

நான் இறக்குமதி செய்யவில்லை. அந்த உதிரிப்பாகங்கள் தரம்குறைந்தவை. பெரும்பாலானவர்கள் நஷ்டமடைந்துள்ளனர். எனவே, நான் சீனாவிலிருந்து வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதில்லை.


*கேள்வி:* எதிர்காலத்தில் இலங்கைச் சந்தையில் எப்படியான வாகனங்களுக்குச் சந்தைவாய்ப்புக் கிட்டும் என கருதுகிறீர்கள்?

*பதில்:* ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கே அதிக சந்தைவாய்ப்புக்கள் உள்ளன. அதேசமயம், இந்திய வாகனங்கள் இறக்குமதிசெய்யப்பட்டபோது, அவற்றிற்குச் சந்தை வாய்ப்பு குறிப்பிட்ட அளவிலேயே உள்ளது.

*கேள்வி:* இந்த வியாபாரத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தாங்கள் சொல்ல விரும்புவது என்ன?

*பதில்:* நுகர்வோர் தாம் செலுத்தும் பணத்துக்குத் தரமானவற்றை கொள்வனவுசெய்யவே விரும்புகின்றனர். எனவே, தரமானவற்றை விற்பது நுகர்வோருக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் நாம்செய்யும் சேவையாகும்.

- இவ்வாறு தொழிலதிபர் பீற்றர் பொன்சேகா தெரிவித்தார்.



ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக்க சமரவிக்கிரமவும், 113 கம்பெனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் பீற்றர் பொன்சேகாவை செவ்வி காண்கிறார்கள். வங்கி அதிகாரி, மொழி பெயர்ப்பாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் தொழிலதிபர் பீற்றர் பொன்சேகா கடந்த 24 ஆம் திகதி தோன்றி தனது தொழில் முன்னேற்றம் பற்றி விவரித்தார்.

தரமான பொருள்களை விற்பனை செய்வதை எமது குறிக்கோளாகக் கொண்டுள்ளேன். அதுவே வெற்றிக்கு வழிவகுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நீர்கொழும்பு, கொச்சிக்கடை மோட்டர்ஸ் நிறுவன உரிமையாளர் பீற்றர் பொன்சேகாவை ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக்க சமரவிக்கிரமவும், 113 கம்பெனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

---

## வீதி பலத்த சேதம் பயணிகள் சிரமம்

பருத்தித்துறை,பெப்.27

மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள வீதி பலத்த சேதமடைந்துள்ளது.

இதனால், நோயாளர்களை ஏற்றி வரும் வாகனங்களும் மற்றும் நோயாளர்களும் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகவும் - கூறப்பட்டது.

(எ-118-173)

## மயிலணி பாடசாலையில் பெயர்வளைவு திறப்பு

வலி.தெற்கு,பெப்.27

சுன்னாகம் - மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் பெயர் வளைவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் த.சற்குணசாமி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைப் பகுதி பொறியியலாளர் செல்வி சாந்தாதேவி தர்மரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பெயர் வளைவைத் திறந்து வைத்தார்.

25 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த வளைவினை பொன்னையா கிருஷ்ணகுமார் என்னும் நலன்விரும்பி அன்பளிப்பாக அமைத்துக் கொடுத்துள்ளார்.

(எ-152)

## இலவச கண்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,பெப்.27

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண்சிகிச்சை முகாமும், பொது மருத்துவ முகாமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திக்கம் மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இதில் வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை மருத்துவப்பரிசோதனைகளை நடத்துவார். (ம-ரி)

## இசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம்,பெப்.27

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வருடாந்த இசைவிழாவின் 7ஆம் நாளான இன்று வெள்ளிக் கிழமை நடைபெறும் நிகழ்வுகளின் விவரம் வருமாறு:

மாலை 4.30 மணிக்கு என்.பிரேமானந், ஆர்.வசந்தன் ஆகியோரின் மங்கள இசை. 5.30 மணிக்கு சோ.அமிர்தகௌரி, சோ.ஜெயகௌரி ஆகியோரின் பாட்டும், 6 மணிக்கு ஏ.தாரணியின் பாட்டும் இடம்பெறும்.

தொடர்ந்து 6.30 மணிக்கு எஸ்.கோபிதாஸ், எம்.ரதீஸ்குமாரின் வயலின் இசையும், 7.15 மணிக்கு சி.வேல்விழியின் பாட்டும், 8 மணிக்கு எல்.திலகநாயகம் போலின் இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (ம-ரி)

---

# முன்னாள் அமைச்சர் சிற்றம்பலம் நினைவாக இன்று முத்திரை வெளியீடு

ஸ்ரீலங்காவின் முதலாவது தபால், தந்தி, தொலைத்தொடர்பு அமைச்சராகப் பணிபுரிந்த கதிரவேலு சிற்றம்பலத்தின் சேவையைக் கௌரவிக்கும் வகையில் அவரது ஞாபகார்த்தமாக இன்று முத்திரை ஒன்று வெளியிட்டு வைக்கப்படுகின்றது. இந்தத் தருணத்தில் க.சிற்றம்பலம் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.

காலஞ்சென்ற கௌரவ கதிரவேலு சிற்றம்பலம் அவர்கள் 1898 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பதின்மூன்றாம் திகதி பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியில் கற்றார். இவர் றோயல் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் பல பரிசில்களை வென்றுள்ளார். அவையாவன:-

ஆங்கிலக் கட்டுரை பரிசு, டி சொய்சா விஞ்ஞான பரிசு, கணிதப் பாடத்திற்கான பரிசு என்பனவாகும். இவர் தமது 15ஆவது வயதில் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியெய்தினார். கதிரவேலு சிற்றம்பலம் தனது மேற்படிப்பை இங்கிலாந்தில் கற்றும் தொடர்ந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கணிதப பட்டதாரியாக வெளியேறினார். இது மட்டுமல்லாது சட்டப்படிப்பையும் கற்று மிடில் டெம்பில் (Middle Temple) இலிருந்து சட்டத்தரணியாக வெளியேறினார்.

இவர் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் அரசாங்க அதிபராகவும், மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றினார். இவர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், மன்னார் - வவுனியா மாவட்டத் தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் தபால், தந்தி தொடர்பு அமைச்சராக 1948ஆம் ஆண்டு கௌரவ டி.எஸ்.சேனாநாயக்காவால் நியமிக்கப்பட்டார். இதே சபையில் நியமிக்கப்பட்ட மற்றைய அமைச்சர்களில் கௌரவ எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவல, கௌரவ ஏரத்நாயக்கா, கௌரவ ஒலிவர் குணதிலக, கௌரவ ஜே.ஆர். ஜயவர்த்தனா, கௌரவ லலிதா ராஜபக்ஷ, பேராசிரியர், சீ.சுந்தரலிங்கம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமாகிய கௌரவ றட்நாயக்கா. வத்தேகம அவர்கள் 1964ஆம் ஆண்டு மாசி மாதம் 3ஆம் திகதி நடைபெற்ற சிற்றம்பலத்தின் மரணத்தில் கலந்து இரங்கலுரை நிகழ்த்தியபோது, "கிராமம்தோறும் வீட்டுக்கு ஒரு வானொலிப்பெட்டி வழங்கி மக்கள் நாட்டு, உலக நடப்புக்களை அறிந்திருக்க வேண்டும் என்ற அவாவுடனும் மற்றும் வானொலியில் அதிகாலையில் ஒலிக்கும் பல்லின சமய நிகழ்ச்சியில் பௌத்தர்களுக்கு உரித்தான பிரித் நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தினார்" என்று கூறினார்.

கதிரைவேலு சிற்றம்பலம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் எல்லோருக்கும் பரீட்சையமான தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தகப்பனார் ஆறுமுகம் கதிரவேலு நீதிவானாகவும், மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றினார். இவரது சிறிய தகப்பன் ஆறுமுகம் கனகரத்தினம் யாழ்ப்பாண நகர சபையின் முதல் தலைவர் மற்றும் யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் ஸ்தாபகரும் கூட. சிற்றம்பலத்தின் தாத்தாவின் தம்பி விஸ்வநாதர் காசிப்பிள்ளை அவர்கள் முடிக்குரிய வழங்கறிஞர். அத்துடன், யாழ். இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் விளங்கினார்.

சிற்றம்பலத்தின் சகோதரர் கதிரவேலு பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தின் முதலாவது நகர பிதாவாகவும், அவரது மைத்துனர் சீ.காசிப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் மூன்றாவது நகர பிதாவாகவும் பதவி வகித்துள்ளார்கள்.முன்னவர் அர்ச்சனா சிற்றம்பலம் ஒரு பிரபல முதலீட்டு வல்லுநராவார், பின்னவரான பேரன் கணேஷ் சிற்றம்பலம் இளம் வயதில் கல்வியில் சாதனை புரிந்ததற்காக கின்னஸ் புத்தகத்தில் பல தடவைகள் அவரது பெயர் பதிக்கப்பட்டுள்ளது.

பி.ஆனந்தகுமார்

---

# அறுவடை நிறைவடைந்த காணிகளில் சிறுதானியச் செய்கையை மேற்கொள்க!

## விவசாயிகளுக்கு அறிவுறுத்து

வலி.தென்மேற்கு,பெப்.27

அறுவடை நிறைவடைந்த நெற் காணிகளில் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுமாறு தொல்புரம் கமநல கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் அப்பகுதி விவசாயிகளைக் கேட்டுள்ளார்.

விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பயறு, உழுந்து, கௌபி, எள்ளு, குரக்கன், சாமை போன்ற சிறுதானியங்களைச் செய்கை பண்ணுவதன் மூலம் விவசாயிகள் தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதுடன், தமது பொருளாதாரத்தையும் மேம்படுத்திக்கொள்ள முடியும் எனவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-10-135)

# வலு குறைந்த மின்சாரத்தால் நிற்சாமம் மக்கள் சிரமம்

வலி.தென்மேற்கு,பெப்.27

சங்கானை, நிற்சாமம் கிராமத்துக்கு வழங்கப்படும் மின்சாரம் வலுக்குறைந்த நிலையில் இருப்பதாகவும் -

இதனால், இரவுவேளைகளில் வீடுகளில் மின்னொளி மங்கிய நிலையில் உள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

வலுக்குறைந்த மின் விநியோகத்தினால் இரவுவேளைகளில் மாணவர்கள் கல்விகற்க முடியாதிருப்பதாகவும் -

இரவு 10 மணிக்குப் பின்னரே ஓரளவு வலுக்கூடிய மின் கிடைப்பதாகவும் இப்பகுதி மின் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சங்கானைச் சந்தைக்குப் பக்கத்திலுள்ள மின்மாற்றி மூலமே நிற்சாமம் கிராமத்திற்கு மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நிற்சாமம் கிராமத்தில் புதிய மின்மாற்றி ஒன்றை நிறுவுவதன் மூலம் குறைந்த வலுவுள்ள மின்விநியோகத்தை தவிர்த்துக்கொள்ள முடியும் என்று இப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (எ-135)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.27

சித்த மருத்துவ மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கைதடி சித்தமருத்துவத்துறையில் இடம்பெறவுள்ளது.

முக்கியவிடயங்கள் பற்றிக் கலந்துரையாடவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது.

(ம-ரி)

## இளவாலை, புனித ஹென்றியரசர் கல்லூரியும் இளவாலை, கன்னியர்மட மகா்வித்தியாலயமும்

### இணைந்து நடத்தும்

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2004

பிரதம விருந்தினர்: திரு.சு.மகாலிங்கம்
*(வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர்)*

சிறப்பு விருந்தினர்: திருமதி றெஜீனா இருதயநாதன்
*(வலயக் கல்விப்பணிப்பாளர் - வலிகாமம்)*

திகதி : நாளை (28.02.2004) சனிக்கிழமை
இடம் : யா/புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானம்
நேரம் : பி.ப.1.30மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(சி-33446) (26-12-14)


# கட்டைக்காட்டிலிருந்து கிளிநொச்சிக்கு மினிபஸ் சேவை

தென்மராட்சி,பெப்.27

வடமராட்சி கிழக்கு தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் கட்டைக்காட்டிலிருந்து முகாவில் ஊடாக கிளிநொச்சிக்கான மினிபஸ் சேவையினை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த மார்க்க பஸ் சேவையினை நடத்தக்கோரி இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்த மினிபஸ் சங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த மினிபஸ் சேவையினை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)


இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை
*ஸ்ரீ வீரகாளி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்*



## மணிசாமி அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா,? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?
ஒருமுறை விஜயஞ் செய்து பாருங்கள்!
N.A.லொட்ஜ் (ராஜா தியேட்டர் அருகில்),
றூம் நம்பர் 10, நியூ லலிதா பில்டிங்,
191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(பார்வையிடும் நேரம் 9 மணிமுதல் 5 மணிவரை) (28899)(34)



# COMPUTER COURSES

New Batches Start on Batch 1 : 05.03.2004 / Batch 2 : 06.03.2004 at 10.00 A.M

- Diploma in Computer Programming
- Diploma in Java Programming
- Diploma in Visual C Programming
- Diploma in Visual Basic Programming
- Diploma in Information Technology



கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க
**IIS**
நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

- Diploma in Internet Technology
- Diploma in MS Office
- Diploma in Eng. Drawing & AutoCAD
- Diploma in Hardware Technology
- Diploma in Desk Top Publishing

## INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )

**Head Office:** IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk

**Branch:** IIS, Nelliyady, Karaveddy



உ
சுவாமியே சரணம் ஐயப்பா!

## சான்றிதழ் வழங்கலும் வாழ்த்தும்

கோண்டாவில் ஸ்ரீ சபரீஸ ஐயப்பன் தேவஸ்தானத்தில் 14.02.2004 சனிக்கிழமை நடைபெற்ற மகரஜோதிப் பெருவிழாவில் கலந்துசிறப்பித்த மங்கள வாத்தியக் கலைஞர்கள், சிற்பக் கலைஞர்கள், சமயத் தொண்டர்கள், அந்தண சிவாச்சாரியார்கள் முதலிய 30 அன்பர்களுக்கு ஆலய சார்பில் பாராட்டுவிழா நிகழ்ந்தவேளை -



பிரம்மஸ்ரீ சி.மனோராஜக் குருக்கள் அவர்களுக்கு முன்னாள் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் அவர்களும், சபரீஸ ஐயப்ப பக்தன் சமாதான நீதிவான் காரை.மணிகண்டன் கனகசபை சுந்தரலிங்கம் அவர்களும் ஒருசேர இணைந்து பாராட்டி அவருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவித்து வாழ்த்துத் தெரிவிக்கும் மகிழ்ச்சியான நிகழ்ச்சியையே படத்தில் காண்கின்றீர்கள்.


(28854)(34-26-19)



# இயேசு அழைக்கிறார்

# யாழ்ப்பாணம் பிரார்த்தனைத் திருவிழா

## விசேஷ ஞாயிறு ஆராதனை



சகோ. D.G.S.தினகரன்
(தகப்பன்)



கலாநிதி போல் தினகரன்
(மகன்)



சகோதரி ஸ்டெல்லா
(தாய்)



சகோதரி இவாஞ்சலின்
(மகள்)

| இடம் | செய்தியாளர் | நேரம் |
|---|---|---|
| தேவசபை, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம் | சகோதரன் D.G.S.தினகரன் | காலை 8.30 |
| தேவசபை, மானிப்பாய் | சகோதரன் போல் தினகரன் | காலை 8.30 |
| கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம், கொக்குவில். | சகோதரி ஸ்டெல்லா | காலை 9.00 |
| கானான் ஜெப ஆலயம், இருபாலை, கோப்பாய். | சகோதரி இவாஞ்சலின் | காலை 9.00 |
| எக்காளத்தொனி சபை, யாழ்ப்பாணம். | கலாநிதி ஜெபராஜ் சாமுவேல் | காலை 9.00 |

மறக்கவேண்டாம்!!

**தேவசெய்தி**
**சகோதரன் போல் தினகரன்**

கடைசி நாள்!!

நேரம்: மாலை 4.30 நாள்: 29.02.2004 இடம்: செல்லமுத்து மைதானம், மானிப்பாய்.

(28876) (34-26-19)

குடும்பமாய் வாருங்கள்! ஆசீர்வாதம் பெறுங்கள்!!

பிரவேசம் இலவசம்.

# அர்த்தமற்ற தேர்தல்...!

## திலக் கருணாரத்ன

**நடைபெறவுள்ள தேர்தலை அர்த்தமற்ற நடவடிக்கை எனக் கூறுகிறார் தேசிய ஹெல உறுமயக் கட்சியின் செயலாளர் திலக் கருணாரத்ன. ஆனால், அதே அர்த்தமற்ற நடவடிக்கையில் அவர் ஆதரிக்கும் பௌத்த துறவிகளின் அமைப்பு வடமாகாணம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஈடுபட்டுள்ளது (போட்டியிடுகிறது). இவரின் கட்சிக்கு தேசியப்பட்டியலில் 2000ஆம் ஆண்டில் 1 ஆசனம், 2001இல் 0 ஆசனம், 2004இல் ? ஆசனங்கள்.**

**அவரது பேட்டியின் தமிழாக்கத்தை யாழ்.மாவட்ட வாக்காளர்களுக்காகப் பிரசுரிக்கிறோம். 'லங்காதீப' வார இதழில் வெளியான பேட்டியின் தமிழாக்கம் இது.**



*கேள்வி:* நான்கு ஆண்டுகளுக்குள், இந்நாடு, மூன்றாவது பொதுத் தேர்தலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. இது பற்றிப் பலர் பலவிதமாக விளக்கமளித்து வருகின்றனர். இது பற்றித் தாங்கள் கூறும் விளக்கம் என்ன?

*பதில்:* மிகத் தெளிவாகக் கூறுவதானால், இது தேர்தல் ஒன்றுக்கான சூழ்நிலை அல்ல. தாங்கள் கூறியதைப் போன்று, கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் ஜனாதிபதித் தேர்தலொன்றும், மாகாணசபைத் தேர்தலொன்றும் நடந்துள்ளதோடு, மூன்றாவது பொதுத் தேர்தலும் நடைபெறவுள்ளது. இத்தேர்தல்களுக்கான மொத்தச் செலவு 3 ஆயிரம் மில்லியன்களாகும். மேலுமொரு மாகாண சபைகளுக்கான தேர்தலும் நடைபெறவுள்ளது. இதுபோன்ற வறிய, பலவீனமான நாட்டில், ஆண்டுதோறும் சுமார் 800 மில்லியன்கள் செலவுசெய்து தேர்தல்கள் நடத்துவதென்பது, தேசிய நிதி தேவையற்ற வகையில் விரயமாக்கப்படும் செயலாகும். மேலும், அத்தேர்தல் மூலம் பலன் கிடைக்கப் போவதும் இல்லை.

விசேடமாக, பொதுத்தேர்தலில் இரு முக்கிய அரசியல் கட்சிகளில் ஒன்றுக்காவது தனித்து அரசமைக்க இயலாத சூழ்நிலையில் கடும் போக்குக் கொண்ட சிறுபான்மைக் கட்சித் தலைவர்களது வரையறையற்ற, நியாயமற்ற கோரிக்கைகளுக்கு இணங்கி, அவர்களது அனுசரணையோடு அரசமைக்கும் நிலையே உருவாகும். அந்த வகையில், இத்தேர்தல் நடைபெறுவது அர்த்தமற்றதாகும். வீறு கொண்டெழுவது மக்களேயாவர். மக்கள் மேல சுமத்தப்பட்டுள்ள, அதிகரித்த வாழ்கைச் சுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரப் பின்னடைவு, ஸ்திரமற்ற அரசியல் நிலைப்பாடு போன்ற எவற்றுக்குமே இத்தேர்தலை நடத்துவதால் தீர்வு காணமுடியாது என்பதை மிகத் தெளிவாகக் கூற முடியும்.

*கேள்வி:* தங்களது விளக்கம் இவ்வாறு இருக்கும்போது அரசோடு ஒருமைப்பாடு காணமுடியாது போனதால், நாட்டை அபாயகரமான நிலையிலிருந்து, மீட்பதற்கே பொதுத் தேர்தலை நடத்த முற்பட்டதாக ஜனாதிபதி கூறியுள்ளாரே?

### இருகட்சிகளும் இணைவதே வழி

*பதில் :* 1978இன் அரசமைப்பின் பலாபலனே நாட்டை அபாயகரமான நிலைக்கு உட்படுத்தியுள்ளது. இந்த விகிதாசார முறை இருக்கும் வரையில - சிறுபான்மையினரின் அங்கத்துவம் பலமாக இருக்கும் வரையில் - நாட்டின் பெரும்பான்மை இனம் பிளவுபட்டிருக்கும் வரையில் - இந்நாட்டை அபாயகரமான நிலையிலிருந்து மீட்க முடியாது. அவ்வாறாயின், இந்த அரசமைப்பு மாற்றப்பட வேண்டும். நாமும் அதை வரவேற்கிறோம். அரசமைப்புக்கான திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு இரு முக்கிய அரசியல் கட்சிகள் இணைவதால் மாத்திரமே சாத்தியமாகுமேயன்றி, சிறுபான்மையினக் கட்சிகளோடு இணைவதால் அல்ல. நாட்டில் அராஜக நிலை தோன்றுவதற்கு நிறைவேற்று அதிகாரம் ஒரு கட்சிக்கும் அரசமைப்பு அதிகாரம் பிறிதொரு கட்சிக்கும் இருப்பதே காரணமாகும். அதை ஒழிக்க வேண்டுமாயின், இத்தேர்தல் முறை முற்றிலும் மாற்றியமைக்கப்படல் வேண்டும். அது இத்தேர்தல் மூலம் சாத்தியப்படாது. ஆதலால், ஜனாதிபதியின் வாதத்தை ஏற்பதென்றால், அது மகச் சிரமமானதே.

*கேள்வி:* எவ்வாறாயினும், இன்றைய நிலையில் நாட்டில் மேலுமொரு பொதுத்தேர்தல் வந்துள்ளது. 'தேசிய ஹெல உறுமய' இதை எதிர் கொள்ள ஆயத்தமாக உள்ளதா?

*பதில்:* விளக்கமாகவே கூறவேண்டும். நாம் இப்போதுத் தேர்தலை எதிர பார்த்தே இருந்தோம். யார் எது கூறினாலும், இறுதியில் இதுதான் நடக்குமென்பதை நாம் உணர்ந்து கொண்டோம். இரு முக்கிய கட்சிகளில் உள்ளோரின் கோட்பாடுகள் வெவ்வேறானவை என்பதால், எவ்வாறாயினும் அரசமைப்பைத் திருத்தியமைத்து, நாடாளுமன்றத்தில் நுழைந்து, பிரதமராவதே ஜனாதிபதியின் திட்டமாகும் அதாவது, ஜனாதிபதியாக இருக்க அவருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள காலம் வரையில் அரசியலில் இருந்து அதன் பின்னர் ஓய்வுபெறும் நோக்கம் அவருக்கு இல்லை. அது கண்டிக்கத்தக்கதாகும். நான் இவ்வார்த்தையைப் பிரயோகித்தமைக்குக் காரணம் வேறு எந்த நாட்டிலும், இருமுறை ஜனாதிபதிப் பதவியை வகித்தபின்னர் அதாவது, இன்று பிரான்ஸைப் பாருங்கள், அது போன்றே பில்கிளின்டன் அரசியலிலிருந்து ஓய்வுபெறும்போது அவரது வயது 54 ஆகும். ஆனால், அரசமைப்பிற்கிணங்க அவர் மீண்டும் 'செனற்' சபைக்கு வர முயற்சி செய்யவில்லை. ஆனால், இலங்கையில் அதிகார ஆசை எந்தளவுக்கு உள்ளதென்று கூறுவதாயின், தற்போது ஜனாதிபதிக்கு 60 வயதாகின்றது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் அவருக்கு அரசியலில் இருந்து ஓய்வு பெறமுடியும். ஆனால, அவ்வாறு ஓய்வுபெறாது மீண்டும் அரசியலில் நுழைய முயல்கிறார்.

### ரணிலின் இலக்கு

ரணில் விக்ரமசிங்கவுக்கு அவசியமாக உள்ளது எவ்விதத்திலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதேயாகும். இத்தகைய நிலைப்பாட்டில் அந்த இருவரும் ஒரு போதும் இணக்கத்துக்கு வரமாட்டார்கள். அதன் காரணமாகவே தேர்தலுக்கு வந்துள்ளார்கள். நாம் அதை எதிர் கொள்ளத் தயாராக உள்ளோம். இதற கிடையில், மிக அண்மையில் பலவிதமான நற்காரியங்கள் நிகழ்ந்துள்ளன. விசேடமாக அக்கோரிக்கைகளுள் ஒன்று மதிப்பிற்குரிய மகாசங்கத்தினரிடமிருந்து எமது கட்சியின் பெயர் மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்பட்டது. அப்பெயர்ப்பொருத்தம் சரியானதல்ல என அவர்கள் தெரிவித்தனர். அவர்களது புத்திமதிகளை ஏற்றுநடக்கும் கட்சி என்றவகையில், நாம் அதற்கு இசைந்து 'தேசிய ஹெல உறுமய' என்று, எமது கட்சியின் பெயரை மாற்றியுள்ளோம் அதுபோன்றே எமது சின்னமும் துன்புறுத்தலைக் குறிக்கும் சின்னமாகுமென்று பௌத்த துறவிகள் விளக்கியதையடுத்து சங்குச் சின்னமாக அதையும் மாற்றியுள்ளோம். கட்சியின் பெயரும், சின்னமும் மாறியுள்ளதென்றாலும், எமது கட்சிக் கொள்கையில் கடுகளவுமாற்றமும் இல்லை.

*கேள்வி:* தேசிய ஹெல உறுமய அமைப்பும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் சேர இருப்பதாக மக்கள் மத்தியில் பேசப்படுகிறதே? அதில ஏதாவது உண்மை உள்ளதா?

*பதில்:* நாம் மிகத் தெளிவாகவே ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான கூட்டு அரசுக்கு எமது எதிர்ப்பைக் காட்டிவருகிறோம். அதைக் கவிழ்க்க வேண்டுமென்ற கடுமையான நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம். இதைக் கூறும் அதேவேளை, எதைப்போன்ற, அல்லது அதைவிடவும் பயங்கரமான அரசை பதவி ஏற்கச் செய்யும் முயற்சியும் எம்மிடம் இல்லை. இக்கட்சியில் வேறு கட்சிகள் இணைந்துள்ளன என்று பேசப்பட்ட போதும், ஜே.வி.பியைத்தவிர ஏனைய அனைத்தும் பெயர்ப் பலகைகளை மாத்திரமே கொண்டுள்ள கட்சிகளாகும். தேச விடுதலை மக்கள் கட்சியை எடுத்துக் கொண்டாலும், ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை எடுத்துக்கொண்டாலும், கம்யூனிஸ்ட் கட்சியை எடுத்துக்கொண்டாலும், லங்கா சமசமாஜக்கட்சியை எடுத்துக்கொண்டாலும் அவை இன்னமும் தீர்மானத்துக்கு வரவில்லை. மக்கள் ஐக்கிய முன்னணியை எடுத்துக் கொணடாலும் இவை அனைத்துக் கட்சிகளும் ஒரு நபர்கட்சிகளே. அவற்றை விடவும் சுயமாக, இலங்கை முழுவதிலும் வியாபித்துள்ள வியூகம் எம்மிடமுள்ளது. அவ்வாறு நிபந்தனைகள் அற்று கூட்டுச்சேருவதற்கான ஆயத்தத்தை ஒருபோதும் நாம் கொண்டிருக்கவில்லை. ஏனெனில், எமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் கட்சிக் கொள்கைகள் எமது கட்சியில் உள்ளன. அவைகளுக்குக் கட்டுப்பட்டே நாம் எங்கு வேண்டுமாயினும் செல்ல முடியும்.

தற்போது உருவாகியுள்ள ஜே.வி.பி. கூட்டு முன்னணி ஐந்து முக்கிய கொள்கைகளைக் கொண்டுள்ளது. முக்கியமாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள தொடர்பாகக் கொண்டுள்ள கொள்கைகளை எம்மால் ஏற்க முடியாது. அதனால், கூட்டு ஏற்படுத்திக் கொள்வதைப் பற்றி நினைக்கவும் முடியாது. எமக்கு கூட்டுச் சேரும்படி அழைப்பு வரவும் இல்லை; நாம் அழைப்பை எதிர்பார்ப்பதும் இல்லை. அதனால் அது தொடர்பாக எமக்குப் பிரச்சினை எழவும் மாட்டாது.

*கேள்வி:* 2000ஆம் ஆண்டு தேர்தலின்போது தங்களது கட்சிக்குத் தேசியப் பட்டியலில் அங்கத்துவம் கிடைதது. 2001இன் தேர்தலின்போது இருந்த அந்த அங்கத்துவமும் பறிபோனது. அப்படியிருக்கும்போது இத்தேர்தலில் அத்தகைய நிலைப்பாடு உருவாகாது போனாலும் முன்னேறிச்செல்லும் திறன் தங்களது கட்சிக்கு உள்ளது என எண்ணுகிறீர்களா?

*பதில்:* 2000ஆம் ஆண்டு தேர்தலின் போது அரசு மாற்றமடையக் கூடிய வகையில் தெளிவான அரசியல் நிலைமை இருக்கவில்லை. அதனால, மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வாக்குகள் எமக்குக் கிடைக்கவில்லை. அது போன்றே, கட்சிகள் மூலம் பிரிந்து போன வாக்குகளும் எமக்குக் கிடைககவில்லை. என்றாலும் எமது கருத்தைப் பிரதிபலிக்கும் மக்களே வாக்களித்துள்ளனர்.

2001ஆகும் போது மக்கள் சக்தி வேறுபக்கம் திரும்பியது. அதாவது, பொ.ஐ.முன்னணி மற்றும் ஜே.வி.பி. கூட்டை தோல்வியுறச்செய்யவேணடும் என்ற கருத்து உருவாகி இருந்தது. அதன் மத்தியில் நுழைந்து நாம் போட்டியிட்டபோது, எமக்குக் கிடைத்த வாக்குக்களின் தொகை குறைந்து போயின. ஆனால், இன்று எமக்கு அத்தகைய பெரும் நீரோட்டமாக இது தோன்றவில்லை. முக்கியமாக, நாமும இந்நாட்டு பௌத்தகுருமாரும் பல காலங்களாக முன்னெடுத்துச் சென்ற இந்த அமைப்பு இன்றைய பௌத்த மக்களிடையே பெரும்விழிப்புணர்வை உருவாக்கியுள்ளது. அது போன்றே, சோமபௌத்த நாயக்கரின் திடீர் இழப்பின் மத்தியில் உருவான மக்கள் அலை இன்று தெளிவாகத் தெரிகிறது. அதனால், அதன் உரிமையாளர்கள் நாமென்றே கருதுகின்றோம். அதை தேசிய பிக்குமார் சம்மேளனமும நாமும் இணைந்தே உருவாகியுள்ளோம். தேசிய, பிக்குமார் சம்மேளனமும் எமஊடாகவே உருவானது என்றே நான் கூறுவேன். எமது வழிநடத்தல்களும் எமது வளங்களுமே அவர்களுக்கு உள்ளது என்றாலும் நாம் சுயமாகவே செயற்படுகிறோம். தேசிய பிக்குமார் சம்மேளனத்துக்கும் எமக்கும் உத்தியோகபூர்வ தொடர்புகள் இல்லாவிடினும், அது எமது செயற்பாடுகளினால் உருவான அமைப்பாகும். இவை அனைத்தின் மூலமாகவும் ஒருமுகப் படுத்தப்படும் மக்கள் நல் அபிப்பிராயங்கள் ஏதோ ஒருவிதத்தில் எமக்குக் கிடைக்கக் கூடுமென நாம் நம்புகிறேன்.

*கேள்வி:* தாங்கள் சோமநாயக்கரின் இழப்பை ஆதாரமாகக் கொண்டு, பொதுத்தேர்தலில் வாக்குகளைப் பெற முயல்வதாக எவராவது தங்களது கட்சியின் மேல் குற்றம் சுமத்தக்கூடும். அது குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* பிரேதங்களை காட்சிக்கு வைத்து அல்லது உடல்வலுவைக் காட்டி தேர்தல் நடத்திய அனுபவம் இருமுக்கிய கட்சிகளுக்கே உள்ளது. அதுபோன்றே ஜே.வி.பிக்கும் எமக்கு, அத்தகைய அனுபவம் இல்லை. அது போன்றே நாம் அவ்வாறு செய்ய முறபடுவதும் இல்லை. ஆயினும், சோமநாயக்கரின் கருத்தே எமது கருத்துமாகும். எம்மோடு மாத்திரமே அப் பெரியார் அரசியல் மேடையில, அரசியல் கூட்டத்தில் பங்கேற்றார். புதிய நகர சபை மன்ற மண்டபத்தில எம்மால் நடத்தப்பட்ட கூட்டத்தில் போதனை செய்பவர் என்ற வகையில் அவர் விஜயம் செய்தார். அது போன்றே, நானும் தேசிய பிக்குமார் சம்மேளனத்தின் தலைமை பௌதத குருமாரும், சோம நாயக்கர் உள்ளிட்ட இந்நாட்டின் பிரபல பௌத்த குருமாரும் தர்மவிஜய அமைப்பின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் பங்கேற்றோம். அதனால் அவரது கருத்திலும், எமது கருத்திலும் எவ்வித பேதங்கள் இல்லை. அதனால், அவர் இந்நாட்டுக்கு ஒரு சில சேவைகளை ஆற்றியிருந்தாலும், இந்நாட்டில் மக்கள் அமைப்பொன்றை உருவாக்க செயறபட்டிருந்தாலும் அதன உரிமை எமக்குரியதே. அவ்வாறின்றி, அதைப பயன்படுத்தி - அப்பெரியோரின் மரணத்தைப் பயன்படுத்தி - அப்பெரியாரின் திடீர் இழப்பை ஆதாரமாக்கி - தேர்தலில் நிற்பது எமது நோக்கமல்ல.

### கொள்கை விளக்கம்

*கேள்வி:* இத்தேர்தலை நோக்கமாகக் கொண்டு தங்களது கட்சி, கொள்கை விளக்கத்தை வெளிப்படுத்துமா?

*பதில்:* ஆம். தெளிவாகவே, 2001 இல் கூட நாம் எமது கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளோம். இம்முறையும் அதில், அதைவிடவும் பெரும் வித்தியாசங்கள் எதுவும் இல்லை. என்றாலும், இன்று உருவாகியுள்ள நிலைபாடு தொடர்பாக அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. அத்தகைய கொள்கை விளக்க மொன்றை நாம் முன்வைப்போம். ★

சரசு

---

## அரச ஊழியர் விடுமுறை ரத்து! கடிதம் மூலம் அமைச்சு அறிவிப்பு

வலி.வடக்கு,பெப்.27

அரச உத்தியோகத்தர்களுக்கான விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற உள்ளமையினால் தேர்தல் கடமைகளுக்காக விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. சுகவீன விடுப்புப் பெறுவதாக இருந்தால் மாவட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவச் சான்றிதழ் வழங்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

---

## தவக்காலச் சிந்தனை

### இறை அருளின் நீரோட்டத்தில் இணைவோம்

**மூன்றாம் நாள்**

அனைத்து சமய சம்பிரதாயங்களிலும் ஊறிய அறநெறிகளில் ஒன்று நோன்பு அல்லது விரதமாகும். உண்பதில் ஒரு கட்டுப்பாடு. சமய சம்பிரதாயங்களில் பல தம் காலத்தால் நீண்டுபோகும்பொழுது அவை வழங்கும் அர்த்தத்தால் குறுகிப் போய் விடுகின்றன. மரபுகளை உள்ளத்தில் அகந்தையோடும் பார்வைக்குப் பகட்டோடும் புரிவது தவறு என இயேசு சுட்டிக்காட்டுகிறார். அவை கடவுளுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டுமானால் இறை - மனித உறவின் வெளிப்பாடாக அமையவேண்டும். தூய நோன்பினால் ஆன்மீக வாழ்வு உறுதி பெறுகிறது. உண்மையான நோன்பு உடலை உருக்குவது மட்டுமல்ல, உள்ளத்தை உருக்கி மனிதரை சாந்தமாக்குகிறது. நல்ல மரபின் உணமைப்பொருளை ஒருவர் அறியுமிடத்து சுயமாகவே அவர் இறை அருளின் நீரோட்டத்தில் இணைந்து கௌகிறார்.

**சுவாமி ஜீவா போல்**
*அ.ம.தி.*

# நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த வீதிகளைத் திருத்த நிதி ஒதுக்கீடு

தெல்லிப்பழை,பெப்.27

2004ஆம் ஆண்டுக்கான பல்வேறு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் வலி.வடக்கில் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருந்த 3 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் கீழ் அளவெட்டி மணற்புலம் வீதி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கென 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல, மாகாண உள்ளூராட்சி அமைச்சின் பிரமாண அடிப்படை நிதி உதவியின் கீழ் மல்லாகம், 7ஆம் கட்டை தேவாலய வீதியைப் புனரமைக்க 2 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும், தெல்லிப்பழை துர்க்காபுரம் வீதியைப் புனரமைக்க 2 லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இம்மூன்று வீதிகளும் மிகநீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்தநிலையில் பொதுமக்களால் விடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை ஏற்று வலி.வடக்கு பிரதேச சபை நிர்வாகம் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (ம-150)

## மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

வடமராட்சி,பெப்.27

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குப் பெரும் பற்றாக்குறை இருந்து வருகிறது.

இங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை (குளிகை வகைகள்) வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நீரிழிவு (சலரோக) நோயாளர்களுக்கான குளிகை வகைகளும் இன்மையால் நோயாளர்கள் தனியார் கடைகளை நாடவேண்டியுள்ளது.

(ம-173)

# இந்திய மீனவரின் அத்துமீறல் குறித்து உரிய தரப்புடன் பேசித் தீர்வு காணப்படும்

## கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் உறுதிமொழி

வடமராட்சி,பெப்.27

வடமராட்சிக் கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாகத் தீர்வுகாண்பதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் பேச்சுக்கள் நடத்தித் தீர்வைக்காண நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகப் பிரதிநிதி ஆகியோர் நேற்றுமுன்தினம் சக்கோட்டையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தனர்.

கடந்த 23ஆம் திகதி வடமராட்சி கடலில் உள்ளூர் மீனவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து சக்கோட்டை புனித சவேரியார் தேவாலயதத்தில் வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசச் செயலாளர் க.சூரியகுமாரன் தலைமையில் கண்டனக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தைச் சேர்ந்த றொபேட் கரிசன், உல்ப் ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

றொபேட் கரிசன் தமது உரையில்:-

அரசு - புலிகள் சமாதான உடனபடிக்கையினை நாம் கண்காணித்து வருகிறோம். இந்திய மீனவர் அத்துமீறல் பிரச்சினை சமாதான உடன்படிக்கை மீறல் அல்ல. ஆனால், இந்த அத்துமீறல் ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்து வருவது வேதனையாக இருக்கிறது. இந்தத் தொல்லை எமக்கு விருப்பமில்லை. இருப்பினும், இப்பிரச்சினைக்கு நாம் உதவிசெய்ய முன்வந்துள்ளோம்.

இது குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவருடன் பேசியுள்ளோம். இது ஒரு தவிர்க்கமுடியாத பிரச்சினை என அவர் கருத்து வெளியிட்டுள்ளார். இதனை ஒரு பிரச்சினையாக எடுத்து இது குறித்து அரசுடனும், புலிகளுடனும் பேசுவதாக எமது குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். காங்கேசன்துறையில் உள்ள கடற்படைத்தளபதி மற்றும் அட்மிரல், இராணுவத்தினர் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தி நடவடிக்கை எடுப்பதில் விருப்பம் கொண்டுள்ளோம் - என்றார்.

மற்றொரு பிரதிநிதியான உல்ப் பேசுகையில்:-

வாரந்தோறும் கடற்படையினருடன் நாம் கடலில் ரோந்து செல்வோம். இந்திய மீனவர்களின் அத்துமீறல் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினைதான் என்பதை நாம் வலியுறுத்தி வருகிறோம். இது ஒரு முக்கியமான பிரச்சினை. தங்கள் அபிப்பிராயப்படி இலங்கைக் கடற்படையினர் கடுமையான சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ளார்கள்.

குறிப்பாக இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்கமுடியாத நிலை உள்ளது. இது பலமட்டங்களில் ஆராய வேண்டிய விடயம். இது தொடர்பாக இலங்கை, இந்திய கடற்படை, இலங்கை, இந்திய அரசுகள் ஆகியவற்றுடன் பேச வேண்டும். இதற்குக் கொஞ்சக்காலம் செல்லும். தற்போது இலங்கையிலும், இந்தியாவிலும் தேர்தல் காலமாகும். ஆதலால் இக்காலத்தில் பேசமுடியாது என்றாலும் பேசுவதற்கு கொஞ்சநாள்கள் எடுக்கும்.

ஆனால், இப்பிரச்சினையைத் தீர்ப்பது கடினமானது என்பதை உணர்கிறோம். இருப்பினும், முழுப்பலத்தையும் காட்டி விரைவில் தீர்த்துவைக்க முயல்கிறோம் - என்றார்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகப் பிரதிநிதியான எம்.பெறோஸ் பேசுகையில்:-

இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க கடற்றொழிலாளர் சங்கச் சமாசப் பிரதிநிதிகள், இராணுவ, கடற்படை அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் கொண்ட கூட்டம் ஒன்றைக் கூட்டிப் பிரச்சினைகளை பேசித்தீர்க்க உரியநடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.

இன்னும் ஓரிரு மாதங்களில் இதற்கான கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு செய்வோம். கூட்டத்தில் எட்டப்படும் தீர்வினை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்து நடைமுறைப்படுத்த ஆவன செய்வோம்.

கடற்படை, இராணுவம், பொலீஸார் மற்றும் அரச அதிகாரிகள் தொடர்பான மனிதஉரிமைகள் மீறல் தொடர்பாகத் தமக்கு முறையிட்டால் அதுதொடர்பாகத் தீர்வுகாணப்படும். மனித உரிமை மீறல்கள் பெரும் பிரச்சினையாக, பூதாகரமாக எழுந்தால் அதற்குப் பின்னர் முறைப்பாடு செய்தால் அது அனுகூலமாக இருக்காது - என்றார்.

இக்கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், சி.சிவமகாராசா, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஜோசப் உட்படப் பலர் உரையாற்றினர். (எ-173)

# மானிப்பாய் ஆஸ்பத்திரியில் புதிய 'எக்ஸ்றே' பிரிவு இயங்க ஆரம்பித்தது

வலி.தெற்கு,பெப்.27

பொதுமக்களின் தேவைகருதி மானிப்பாய் கிறீன் மெமோறியல் ஆஸ்பத்திரியில் புதிதாக நிறுவப்பட்ட எக்ஸ்றே பிரிவொன்று தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த பேராயர் அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசனால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி திருமதி சி.அம்பலவாணர் தலைமையில் இந்தப் பிரிவின் ஆரம்பம் தொடர்பான நிகழ்வு இடம்பெற்றது.

கலாநிதி எஸ்.ஜெபநேசன் தம்பதிகள், வைத்தியசாலை உறுப்பினர்கள், யாழ். போதனா வைத்தியசாலை, கன்னியர்மடம் ஆஸ்பத்திரி, இணுவில் மக்கிலியட் ஆஸ்பத்திரி என்பவற்றின் உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

1932 ஆம் ஆண்டு டாக்டர் ஜேம்சன் முதன்முதலாக எக்ஸ்றே இயந்திரம் ஒன்றை இவ்வைத்தியசாலைப் பயன்பாட்டுக்கெனக் கொள்வனவு செய்தார். அதனைத் தொடர்ந்து இப்பிரிவு சிறந்த முறையில் இயங்கி வந்துள்ளது.


நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள், போர்நிலைகள் என்பவற்றாலும், 1990 ஆம் ஆண்டுமுதல் மின்சார விநியோகம் தடைப்பட்டுப் போனமையாலும் இப்பிரிவு செயலிழந்துபோய் விட்டது. அதனைத் தொடர்ந்து எக்ஸ்றே இயந்திரங்களும் பழுதடைந்துவிட்டன.

இன்று புதிய இயந்திரம் பெறப்பட்டு இப்பிரிவு சிறந்த முறையில் சேவையாற்ற வழிசெய்யப்பட்டுள்ளது - என தமது தலைமையுரையில் குறிப்பிட்டார் திருமதி சி.அம்பலவாணர்.

இந்த ஆஸ்பத்திரியில் நீண்டகாலம் சேவையாற்றிய அமரர் டாக்டர் ஜே.வி.தம்பர் ஞாபகார்த்தமாக அமெரிக்காவில் வசிக்கும் அவரது மகன் டாக்டர் இசாக் தம்பர் எக்ஸ்றே இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அத்துடன், ஆஸ்பத்திரியின் பயன்பாட்டுக்கென இரத்தப் பரிசோதனை இயந்திரம் (Haematology Analyser) ஒன்றும் கிடைத்துள்ளது. உயிரியல், இரசாயனம் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ள இது பயன்படுத்தப்படும். குறுகிய நேரத்தில் முழு இரத்தப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு பூரண தகவல்களை வழங்கக்கூடிய இந்த இயந்திரத்தின் மூலம் வளமான பரிசோதனைகளை மேற்கொள்ளமுடியும் என்றும் - அவர் தமது உரையில் தெரிவித்தார்.

(எ-152)



எக்ஸ்றே இயந்திரத்தை ஆயர் ஜெபநேசன் இயக்கிவைத்தபோது. எடுக்கப்பட்ட படம். *(படம்: வலி.தெற்குச்செய்தியாளர்)*

## தரம் 5 மாணவருக்கு மாதிரிப் பரீட்சைகள்

தென்மராட்சி,பெப்.27

தென்மராட்சி கல்வி வயலப் பாடசாலைகளில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் ஆரம்பப்பிரிவுக் கல்வியை முன்னேற்றும் நோக்கதுடன் தரம் 5 மாணவர்களைப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் பொருட்டு 10 மாதிரிப் பரீட்சையும், ஒரு இறுதிப் பரீட்சையும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ளன.

மாதிரிப்பரீட்சைகள் மார்ச் மாதம் தொடக்கம் நடத்தப்படவுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(எ-117)

## தென்மராட்சியில் முறைசாராக் கல்வி

தென்மராட்சி,பெப்.27

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் பாடசாலைகளில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் பின்வரும் பாடநெறிகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

உடை அமைத்தல் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம்), கணனி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி.).

தட்டச்சு சுருக்கெழுத்து (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), எழுத்தறிவூட்டல் (அல்லாரை அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, மந்துவில் றோ.க.த.க. பாடசாலை).

மேற்படி பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள விரும்புவோரை அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் தமது விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-117)

# இறைவனை நித்தமும் வணங்கினால் பிறவிப் பயனை அடைந்து கொள்ளலாம்

### ஞானக்கதிர்

*'கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனில்'* என்பது வாயுறை வாழ்த்து. எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வி அறிவாலான பயன் மெய்யுணர்வினை உடையானது நல்ல தாள்களைத் தொழுவதேயாகும். மனிதனுக்குள் ஏற்கனவே, புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதாகிய கல்வியானது அதன்படி கற்றாங்கு ஒழுகி இறைவனைத் தொழுகின்ற போதுதான் முழுமையான நிலையை அடைகின்றது.

இதனாலேயே,

*'கல்லாத மூடரைக் காணவும் ஆகாது*
*கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன் அன்று*
*கல்லாத மூடர்க்கு கல்லாதார் நல்லராம்*
*கல்லாத மூடர் கருத்தறியாரே'*
*என்கிறார் திருமூலர்*

கல்லாத மூடர்க்கு கல்லாதார் நல்லாரம். கல்லா என்பதன் ஊடாக எத்துணை இலக்கண, இலக்கிய, அறிவியல் நூல்களை ஐயந்திரிபறக் கற்றும் சிவஞானம் இல்லாதோர்க்கு எந்தவிதமான கல்வியறிவும் இல்லா ஒருவன் எடுத்துக்காட்டு என்கிறார். ஆகவே, ஒருவன் எவ்வளவுதான் ஆழமாக, கூர்மையாக, அகலமாகக் கற்றாலும் அவனிடத்திலே சிவஞான சிந்தனை இல்லையென்றால் அவன் கற்றதனால் எந்தப் பயனும் இல்லை.

'சக்திதான் யாதோ என்னில் தடையிலா ஞானமாகும்' என்கிறது சிவஞான சித்தி. உண்மையான ஞானத்தினுடைய மூன்று இலக்கணங்களான ஆழம், அகலம், கூர்மை என்பனவே சக்தி ஆகும். உண்மையான தெளிந்த அறிவே சக்தியாகும்.

*'வெண்மையும் பொலிவும்*
*விழைதகு வனப்பும்*
*ஒண்மையும் மரீஇ, உரவோர்*
*மனமெனக்*
*களங்கமற்றோங்கி, விளங்கும்*
*இந்நியமம்'* என்று பாரத நாட்டின் தலைநகராகிய புதுடில்லி மாநகரில் மகதநாட்டு சிற்ப நலமெலாம் ஒருங்கு அமையப் பெற்ற 'இலட்சுமி நாராயண மாந்தர்' என்ற கோயிலைப் பற்றிப் பாடுவார் விபுலானந்த அடிகள்.

அதாவது, வெள்ளை நிறமும், எடுப்பான தோற்றமும், பார்த்தோர் பரவசமடையும் அழகும், பிரகாசமும் பொருந்தி நல்லறிஞர் மனம்போன்று குற்றம் இல்லாததாய் உயர்ந்து விளங்குகின்ற கோயில் என்கிறார். அந்த ஆலயத்தின் சிறப்பினை குற்றமற்ற நல்லறிஞர் மனம்போன்று உயர்ந்தது என்பதிலிருந்து உண்மையான அறிஞனுடைய மனத்திலே மாசு இருக்காது என்பதனை உணரலாம். அத்தகைய உள்ளத்திலே ஆண்டவன் குடியிருப்பான். அதனாலேயே கற்றதனாலாய பயனை முழுமையாக அடையமுடியும்.

காலமெலாம் உலகம் இதுவரையிலும் பெற்று வந்திருக்கிற அறிவு முழுவதும் மனத்திலிருந்துதான் வந்திருக்கிறது. அதனையே 'பிரபஞ்சத்திலுள்ள அறிவு முழுவதும் நிரம்பிய மிகப்பெரிய நூல்நிலையம் உன்னுடைய உள்ளத்திலேயே அடங்கி இருக்கிறது' என்றார் சுவாமி விவேகானந்தர். மிகவும் வலிமை பொருந்திய உள்ளத்தை ஒரு நிலைப்படுத்திக் கற்கின்றபோதுதான் குற்றமற்ற நிலையை அடையலாம். அங்கே ஆண்டவன் வீற்றிருந்து அருளுவான். உள்ளத்தில் கள்ளம் உள்ள ஒருவன் எதனைக் கற்றாலும் அதிலே தூய்மையைப்பெற முடியாது. மாறாகத் தெளிவான சிந்தனையோடு கல்வியினைக் கற்கின்றபோது இயல்பாகவே இறையருள் கிட்டும்.

வையகத்திலே வாழுகின்ற எல்லோரும் நாம் கற்றதன் பயன் பிறவிப் பெருங்கடலை நீந்துதலே - இறைவனை வணங்குதலே என்று உணருகின்ற பொழுதே உண்மையான கல்வியையும், முழுமையான பயனையும் அடையமுடியும்.

**ப.றமேஸ்**


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*வ.பி.போ.சபை சிரேஷ்ட சாலைப் பரிசோதகராகவும் போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவராகவும் சேவையாற்றி ஓய்வுபெற்ற அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டு ஆவரங்கால் ஆனந்த கானத்தில் வசிப்பவரான*

**திரு.சின்னப்பொடி தங்கத்துரை**

அவர்கள் 09.02.2004 அன்று யாழ்.மாவட்ட நீதிமன்றில் மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் யாழ். மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் அல்வாய் வடக்கு, அரசடிப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை, வட அல்வை இளங்கோ சனசமூகநிலையம் ஆகியவற்றில் செயலாளர், தலைவர், போசகர் ஆகிய பதவிகளில் வெவ்வேறு காலகட்டங்களில் நீண்டகாலமாக அரும்பணியாற்றி வருகின்றார்.

தொண்டர் நிறுவனங்களில் உறுப்பினராகவும், ஆலோசகராகவும் சமுகசேவைகளில் முழுமையாகத்தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார். இவருக்கு சமாதான நீதிவான் நியமனம் கிடைத்தமையைப் பாராட்டுவதுடன், மேலும் நீண்டகாலம் சமூக, சமய பணிகளில் ஈடுபட அல்வாய் வடக்கு, அரசடி விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

*அல்வாய் வடக்கு.* - **இளங்கோ சனசமூக நிலையம்.**

(28961) (19-26-24)

யாழ்ப்பாணம்

## யார் போகிறார்கள் என்பதைவிட
# சங்கரி, தேவானந்தா அணிகள் நாடாளுமன்றம் போகக் கூடாது
### கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் ஈழவேந்தன்

யாழ்ப்பாணம்,பெப்.27

'எதிர்வரும் தேர்தலில் வென்று நாடாளுமன்றத்துக்கு யார் எல்லாம் செல்கிறார்கள் என்பதைவிட' ஆனந்த சங்கரி அணியும் டக்ளஸ் அணியும் செல்லக்கூடாது என்பதே முக்கியமானது.

- இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பு தேசியப்பட்டியல் உறுப்பினர் ஈழவேந்தன தெரிவித்தார். கடந்த செவ்வாய்க கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் பங்குகொண்டு உரையாற்றும்போது அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

வருகின்ற தேர்தல் உண்மையில் தேர்தலா? இல்லை. மக்கள் தருகின்ற கணிப்பு அது.

சிங்களப்பேரினவாதத்தின் இருள் சூழ்ந்த தன்மையை நீக்குகின்ற பேரொளிதான் எங்கள் பிரபாகரன்.

பிரபாகரன் பற்றி பலர் பல்வேறு மாதிரிக் கூறுகின்றார்கள். உணர்ச்சிக கவிஞர் காசியானந்தன் கூறுகிறார் "பிரபாகரன் ஈழத்து தாய்ப்பிள்ளை அவன் பேரும் பெருமையும் யாருக்கும் இல்லையப்பா. தலைவனாய் வந்து எம்மைத் தாங்கியதால்.." என்று பாடல் தொடர்ந்து செல்கிறது. அந்தத் தலைவன் வழியில் இன்று நாம் தேர்தலில் நிற்கின்றோம்.

யார் நாடாளுமன்றம் போகவேணடும் என்பதற்கு மேலாக யார் போகக் கூடாது என்பதுதான் முக்கியம். எனது இலகு தமிழ் உங்களுக்கு விளங்கும் என்று நினைக்கின்றேன். 'யார் போகக் கூடாது' என்பதனை நீங்களே அறிவீர்கள். நீங்கள் அறிந்த அவர்களைப் போன்ற புல்லுருவிகள் நாடாளுமன்றம் போகக்கூடாது. நெல்லுக்குள் முளைக்கும் களைகள் தமிழர்களின் அரசியலில் அதிகரித்து வருவது மிகவும் வேதனைக்குரியது.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் எனக்கூறிய ஆனந்தசங்கரி, இன்று தடம்புரண்டுள்ளார். "அரசியலில் அழுகுதொழுநோயினர் ஆனந்தசங்கரி" அவரைக் கூட்டமைப்பின் தலைவராக ஏற்றது தமிழினம் செய்த மன்னிக்கமுடியாத தவறு.

ஆனந்தசங்கரியின் அரசியல் வாழ்வில் தமிழினத்திற்கு எதிராக அவர் பல குத்துக்கரணங்கள் அடித்தவர். புலிகளின் முகாம் எங்குள்ளது என்று வரைபடம்வரைந்து அரசுக்குக் கொடுத்தவர் எங்கள் ஆனந்தசங்கரி.

இவர்கள் போன்றவர்கள் தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றம் செல்லக் கூடாது. வருகின்ற தேர்தலில் மக்கள் இவர்களை ஓரங்கட்ட வேண்டும். இதில் நாங்கள் யாரும் தவறு செய்யக்கூடாது. நாங்கள்தான் எங்கள் எதிர்காலத்தைத் தீமானிக்கவேண்டும்.

தமிழினம் ஒன்றுபட்ட பலத்திலே உயிர்விட்டுவாழும் வரலாறு கொணடதுவர்கள் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்துவிட்டோம். இன்றைய அரசியல் சூழலிலும் தமிழினம் தவறு செய்யுமானால் வரலாறு அவர்களை மன்னிக்காது எனத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்ததாவது:-

எதிர்வரும் தேர்தல் தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் தீர்மானமாக அமையப்போகின்றது.

தமிழர்களின் தேசியப்பலம் நிறுவப்பட்டதினால் தமிழர்கள் தம்மை அழிக்கமுடியாத அளவிற்கு நிலை நிறுத்திக்கொண்டுள்ளனர். அவர்கள் இராணுவ பலத்தைத் தப்பவைத்துக் கொண்டு தமது எதிர்காலத்தை இராணுவபலம் மூலம் தீர்மானிக்கின்ற ஒரு சூழ்நிலையில் இந்தத் தேர்தல் வந்துள்ளது. காலம் காலமாகப் போராடி வீரச்சாவடைந்த 18 ஆயிரம் மாவீரர்களின் எண்ணங்களையும் லட்சியங்களையும் நிறைவேற்றுவதற்கும் பல லட்சம் மக்களின் உழைப்புக்கான பயனை அடைவதற்கும் அரசியல் சந்தர்ப்பமாக இந்தத்தேர்தல் அமையப் போகிறது. இது தேர்தல் அல்ல, தமிழ் மக்கள் மீண்டுமொருமுறை தங்கள் அரசியல் தீர்மானத்தை நெறிப்படுத்துகின்ற ஒரு சந்தர்ப்பமாக இது அமையும்.

இந்தத்தீர்மானத்தை தமிழ்மக்கள் சரியாக முன்வைப்பார்களானால அதுதான் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கான தீர்வைத்தரும் இந்தத் தேர்தலில் ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தின்கீழ் போட்டியிடுகின்ற தமிழ்க் கூட்டமைப்பை இந்தத் தீமான முன்வைப்பில் நாங்கள் ஆதரிக்கின்றோம் - எனத்தெரிவித்தார்.

(ம-ரி)




# ரணில் மீண்டும் ஆட்சியமைப்பார் நுவரெலியாவில் ஆறுமுகம் உறுதி

தலவாக்கலை,பெப்.27

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி மிகப்பெரும்பான்மை ஆசனங்களைப்பெற்று ஆட்சியமைக்கும். நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து இ.தொ.கா. போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெறுவது நிச்சயம் என்று இ.தொ.கா. தலைவரும் வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் வேட்புமனுக்கள் தாக்கல்செய்யப்பட்ட பின்னர் பத்திரிகையாளர்களுடன் உரையாடுகையில் இவற்றைத் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அதிக ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்கும். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அதன் காரணமாகவே நாமும் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறோம். இப்படி அவர் கூறினார்.

தேர்தல் செயலகத்திற்கு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, முன்னாள் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் ஆகியோரும் வருகைதந்து வேட்பு மனுவைக் கையளித்தனர்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாகவே மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடுகின்றது. தேர்தலில் வெற்றிபெற்ற பின் நாம் முன்வைக்கும் சில கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வரும் அரசியல் கட்சிக்கே எமது கட்சி ஆதரவளிக்கும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நுவரெலியா தேர்தல் செயலகத்தில் வேட்புமனுக்களைக் கையளித்த பின்னர் அவர் பத்திரிகையாளர்களிடம் பேசினார்.

## ஈ.பி.டி.பி. கொழும்பு பட்டியலில் சிங்களவர்கள், முஸ்லிம்கள், ஒரு பெண்

யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இரு மாவட்டங்களிலும் ஈ.பி.டி.பி. தேர்தல் களத்தில் குதித்துள்ளது. கொழும்பில் ஜோண்பத்மநாயகி என்ற பெண் உட்பட சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்களும் ஈ.பி.டி.பி. பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

முதன்மை வேட்பாளரான றொபட் பத்திரகே ஸ்டீபன் நேற்று முன்தினம் கொழும்பு மாவட்டச் செயலகத்தில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்.

இப்பட்டியலில் சிறீரங்கதாஸ், எஸ்.யோகநாதன், எஸ்.யோகராஜா, எம்.மகேந்திரராஜா, பி.சண்முகநாதன், கே.தில்லையம்பலம், டி.எம்.பாருக் அஸீஸ், பி.சிவபாதம், ஜோன் பத்மநாயகி, டானியல் ஜனோயா, ரோய் டானியல், ஈ.ஏ.டி. வீரசேன, எம்.ஐ.முருகன், ஜீ.லோகநாதன், கே.ஜீ.டி காமினி குணதாச, எஸ்.இராம்குமார், வி.ஜெயவேந்தன், டி.இராஜேந்திரராஜா, சி.பீ.மொஹமட் அஸீஸ், கே.கமால்டீன், கே.கலைச்செல்வன், கே.உதயசந்திரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

# கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிப்பதைத் தடுத்தால் சர்வதேச சமூகத்திற்குப் பதில் சொல்லவேண்டிவரும்

மட்டக்களப்பு,பெப்.27

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள மக்கள் வாக்களிப்பதை இராணுவம் தடுத்தால், சர்வதேச சமூகத்துக்குப் பதில் சொல்ல வேண்டிவரும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து போட்டியிடும் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மற்றும் மட்டு. - அம்பாறை அபிவிருத்திக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

அங்கு உரையாற்றிய தளபதி ரமேஷ் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தத் தடைகள் வந்த போதிலும் எதிர்வரும் தேர்தலில் வாக்களிப்பதற்கு மக்கள் உணர்வுபூர்வமாகத் தயாராக வேண்டும்.

இந்தத் தேர்தல் ஒரு கொள்கையின் அடிப்படையில் தமிழர்களால் எதிர்கொள்ளப்படுகின்றது. அதில் தமிழர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவேண்டும்.

உலகத்துக்கும் தெற்கு அரசியல்வாதிகளுக்கும் மீண்டும் ஒரு தடவை தமது தெளிவான கருத்தைத் தமிழ் மக்கள் தெரிவிக்கவேண்டும் - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், புலிகளின் மூத்த பிரமுகர் கரிகாலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

தேர்தல் பிரசாரத்தில் மட்டும் கவனம் செலுத்தாமல் வாக்குச் சீட்டில் எப்படி வாக்களிப்பது என்பது பற்றியும் மக்களுக்குத் தெளிவுபடுத்தப் பட வேண்டும் என்று கௌசல்யன் அங்கு வலியுறுத்தினார். (ம-21)

# பிரசாரக் களமாக மாறும் பொது நிகழ்வு மேடைகள்

தென்மராட்சி,பெப்.27

பாடசாலை மற்றும் பொது அமைப்புகளால் நடத்தப்படும் நிகழ்வுகள் அரசியல் கட்சிகளின் பிரசார மேடைகளாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் விருந்தினராகக் கலந்துகொள்ளும் அரசியல் பிரமுகர்கள் அந்நிகழ்வினை தேர்தல் பிரசாரக்கூட்டமாகப் பயன்படுத்துவதாகவும் -

இதனால், போட்டிகள் முடிவடைந்ததும் தமது பிள்ளைகள் பரிசில் பெறுவதைக்கூடப் பார்க்காமல் பெற்றோர் வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-117)



பலத்த பாதுகாப்புடன் யாழ். செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்த சுயேட்சை வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரி.

# தமிழர்தரப்பு ஒரு குடையின் கீழ் உள்ளதை தேர்தல் மூலம் சர்வதேச சமூகம் உணரும்
### அடைக்கலநாதன் தெரிவிப்பு

வவுனியா,பெப்.27

தமிழ் தேசியத்தின் ஒற்றுமையை வலியுறுத்தக்கூடிய தேர்தலாக இந்தத தேர்தல் வந்திருக்கிறது. ஒருகுடையின் கீழ் தமிழ்த் தரப்பு ஒன்று இணைந்திருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டும்

இவ்வாறு தமிழ் கூட்டமைப்பின் வன்னித்தேர்தல் தொகு தியின் முதன்மை வேட்பாளரும் ரெலோ இயக்கத்தலைவருமான அ.அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென் இலங்கையும் உலகமும் இந்தத் தேர்தல் மூலம் நிச்சயமாக எமது தமிழ்ச் சமூகம் ஒற்றுமையாக ஒரு குடையின் கீழ் உள்ளோம் என்பதைப் புரிந்துகொள்ளும். எமது மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய ஒருதீர்வைப் பெறவேண்டும் என்றால் தமிழ் மக்கள் அனைவரும் ஒருகுடையின் கீழ் இணைய வேண்டும்

இம்முறை யார் ஆட்சி அமைப்பது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக நாம் அமைவோம் என்பதனை உறுதியாகவும் ஆணித்தரமாகவும் கூறிக்கொள்கிறேன். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுதியாக உழைக்கும்.

ஆட்சி அமைக்கும் சக்தியாக நீங்கள் வந்தால் அமைச்சுப் பதவிகளைப் பெறுவீர்களா என்று ஒருவரிடம் கேட்டதற்கு, நிச்சயமாக ஒரு போதும் இல்லை என்றார். தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை ஒரு அமைச்சுப் பதவிகளையும் நாம் பெற மாட்டோம் என்றார் அவர், ஒரு வேளை உங்களின் கோரிக்கையை இரு கட்சிகளும் ஏற்கவில்லை என்றால் அடுத்த நடவடிக்கை என்ன? என்று கேட்க, நிச்சயமாகப் போர்தான, அதனைத் தீர்மானிப்பவர்கள் தென் இலங்கை அரசியல் தலைவர்களாகத் தான் இருப்பார்கள் என்றார் அ.அடைக கலநாதன். (ம-164)



## தேர்தல் சுவரொட்டி

யாழ்ப்பாணம்,பெப்.27

"நாங்கள் எங்கள் வீட்டுக்குச் செல்கிறோம். படையினரே நீங்கள் உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட தேர்தல் பிரசார சுவரொட்டிகள் யாழ். குடாநாடு எங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் புகைப்படத்துடன் கூடிய இச்சுவரொட்டிகளில் வீடு ஒன்றின் படமும் அதன் சுற்றாடலில் படையினரின் நடமாட்டமும் பொறிக்கப்பட்டுள்ளது.

முழுவர்ணப் பிரசுரமாக இச்சுவரொட்டி வெளிவந்துள்ளது.(ம-173)

# பொது ஊர்வலம், பதாகைகளுக்கு திங்கட்கிழமை முதல் தடை!

பொது ஊர்வலங்கள், வாகனப் பேரணிகள் மற்றும் வீதிகளில் கட்டப்படும் பதாகைகள் அனைத்திற்கும் கடந்த திங்கட்கிழமையிலிருந்து தடை விதிக்கப்பட்டுள்ளது. பொலீஸ் தேர்தல காரியாலயத்திலிருந்து வந்த அறிவிப்பை அடுத்தே இந்தத் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்கள் தொடர்பாக அனைத்துப் பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சட்டத்தை மீறுவோர் வெறும கைது செய்யப்படுவர்கள் அவர்களது பதவி மற்றும் கட்சித் தொடர்புகள் எவையும் கவனத்தில் எடுக்கப் படமாட்டாது. இவ்வாறு பொலீஸ் தேர்தல் காரியாலயத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ம-து)

# சமாதானத்தின் சுயவிவரக்கோவை

**கடந்த பொதுத்தேர்தலில் ஐ.தே.முன்னணி அரசு ஆட்சி ஏற்றதைத் தொடர்ந்து 20 ஆண்டுகளாக இடம்பெற்றுவந்த போர் சூழ்நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டன. ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதிலிருந்து அவரது அரசு கலைக்கப்படு வரை சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக இடம்பெற்ற சம்பவங்களை "ராவய" வார இதழ் தனது அனுபந்தத்தில் தொகுத்து வெளியிட்டுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம். *நேற்றைய மிகுதி இன்று வெளியாகிறது.***

**2002 ஒகஸ்ட் 22ஆம் திகதி**

அமெரிக்க பிரதிராஜாங்கச் செயலர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்தார்.

**2002 ஒகஸ்ட் 25ஆம் திகதி**

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் செப்ரெம்பர் மாதம் 06ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகள் அமைப்பின மீதான தடைநீக்கப்படுமென அரசு தெரிவித்தது.

**2002 செப்ரெம்பர் 03ஆம் திகதி**

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் லண்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தார்.

**2002 செப்ரெம்பர் 05ஆம்திகதி**

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான தடை நீக்கப்படுவதாக அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

**2002 செப்ரெம்பர் 16ஆம் திகதி**

விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும், அரச தரப்புப் பிரதிநிதிகளுக்குமிடையே தாய்லாந்தில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

**2002 செப்ரெம்பர் 18ஆம் திகதி**

தாய்லாந்தில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின் முதற்சுற்று முடிவடைந்தது.

**2002 செப்ரெம்பர் 25ஆம் திகதி**

ஏ-9 பாதையை 24 மணிநேரமும் போக்குவரத்துக்காகத் திறந்து வைப்பதென அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே இணக்கம் காணப்பட்டது.

திருகோணமலை இராணுவ முகாமைச்சேர்ந்த ஏழு இராணுவத்தினர் மணல் ஏற்றிவருவதற்காக 'வெல்கம் வெஹர'வுக்கு சென்ற வேளையில் விடுதலைப் புலிகள் அமைப்பால் தடுத்து வைக்கப்பட்டனர்.

**2002 செப்ரெம்பர் 28ஆம் திகதி**

அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் 11 உறுப்பினர்களும், விடுதலைப் புலிகள் அமைப்பால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு ராணுவ வீரர்களும இவ்விரு தரப்பினராலும் பரிமாற்ற முறையில் விடுவிக்கப்பட்பனர்.

**2002 ஒக்ரோபர் 05ஆம் திகதி**

யாழ்ப்பாணம் - நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி.பி கட்சியின் காரியாலயத்தின் மீது இனம் தெரியாதோரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அச்சம்பவத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பே சம்பந்தப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியினர் குற்றஞ்சாட்டினர்.

**2002 ஒக்ரோபர் 23ஆம் திகதி**

இரண்டாம் சுற்றுச் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வது குறித்து விடார் ஹெல்ஹிசன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரிடம் பேச்சை மேற்கொண்டார்.

**2002 ஒக்ரோபர் 30ஆம் திகதி**

தாய்லாந்தில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின் முதற்சுற்றின் இரண்டாம் கட்டப்பேச்சுக்களை மேற்கொள்ளு முகமாக அரச தரப்புப் பிரதிநிதி களும், விடுதலைப் புலிகள் அமைப் பின் பிரதிநிதிகளும் ஒரே விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

**2002 ஒக்ரோபர் 31ஆம் திகதி**

சமாதானப் பேச்சுக்களின் இரண்டாம் கட்டப்பேச்சுக்கள் தாய்லந்தில் ஆரம்பமாகின. 1996 ஜனவரி 31ஆம் திகதி 77 பொது மக்களின் மரணத்துக்குக் காரணமான ஸ்ரீலங்கா மத்தியவங்கி மீதான குண்டுத்தாக்குதலுக்கு உதவி மற்றும் ஒத்தாசை வழங்கியதான குற்றச்சாட்டின் பேரில் பிரபாகரன் உட்பட்ட மூவரைக் குற்றவாளிகளாகத் தீர்மானித்து அம்மூவருக்கும் 200ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**2002 நவம்பர் 25ஆம் திகதி**

ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற அரசியல் மற்றும் பொருளாதார உதவி மகாநாட்டில் உலகத்தின் நாற்பதுக்கும் அதிகமான நாடுகள் கலந்துகொண்டன.

**2002 டிசெம்பர் 2ஆம் திகதி**

சமாதானப் பேச்சுக்களின் முதற்சுற்றின் மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் ஒஸ்லோ நகரத்தில் இடம்பெற்றன.

**2002 டிசெம்பர் 5ஆம் திகதி**

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நாடு பிளவு படாதவகையில் உள்நாட்டு சுயாட்சி நிர்வாக முறையிலான சமஷ்டி ஆட்சி முறையை உருவாக்க அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் இணங்கிக்கொண்டன.

**2002 டிசெம்பர் 25ஆம் திகதி**

வடபகுதியில் உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குமாறு விடுதலைப் புலிகள் அமைப்பு அரசை வற்புறுத்துமானால், அது சமாதான நடவடிக்கைளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கருத்து வெளியிட்டது.

**2002 டிசெம்பர் 26ஆம் திகதி**

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் தரப்புக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட்டார்.

**2003ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 06ஆம் திகதி**

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் மேலுமொரு சுற்று சமாதானப் பேச்சுக்களில் அரசு மற்றும் புலிகள் ஆகிய தரப்பினர் கலந்து கொண்டனர். இதன் முடிவில் அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக உருவாகியுள்ள சிக்கல்லுக்குத் தீர்வு காண்பதற்காக இந்திய இராணுவ ஜெனரல்களில் ஒருவரான நம்பியாரின் அறிக்கையைக் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

**2003 ஜனவரி 16ஆம் திகதி**

ஜப்பானிய அரசின் விஷேட பிரதிநிதியான அகாசி, ஜே.வி.பி தலைவர்களைச் சந்தித்துச் சமாதான நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் செயற்பட்டுவரும் நோர்வே அரசின் நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் நாடு திருப்தியடைவதாகத் தெரிவித்தார்.

**2003 ஜனவரி 27ஆம் திகதி**

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் மற்றும் யுத்தநிறுத்த உடன்பாட்டு மீறல் சம்பவங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி இராணுவத் தளபதியிடம் எழுத்து மூலம் வேண்டிக் கொண்டார்.

**2003 பெப்ரவரி 06ஆம் திகதி**

விமான எதிர்ப்பு ஆயுதங்களை எடுதது வந்ததாகக்கூறப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சொந்தமான இயந்திரப் படகொன்றை நெடுந்தீவுக்கு அண்மையில் கடலில் இடைமறித்து கடற்படையினரும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும் சோதனையிட முயன்ற சமயம், அப்படகிலிருந்த மூவர் படகுடன் சேர்த்து தம்மையும் அழித்துக் கொண்டனர்.

**2003 பெப்ரவரி 7ஆம் திகதி**

சமாதானப் பேச்சின் மேலுமொரு சுற்றுப்பேச்சுக்கள் ஜேர்மனியின் பேர்லின் நகரில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரிடையேயும் இடம்பெற்றன.

**2003 பெப்ரவரி 11ஆம் திகதி**

இராணுவத்தினர் அணியும் இடைப்பட்டியைப் போன்ற தோற்றமுள்ள இடைப்பட்டி அணிந்த வண்ணம் மானிப்பாய் இராணுவ முகாமைக் கடந்துசெல்ல முயன்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் எட்டுப்பெண் உறுப்பினர்களைத் தடுத்து நிறுத்தி சோதனையிட இராணுவத்தினர் முயன்ற சமயம் இராணுவத்தினருக்கும் அப்பகுதி பொதுமக்களுக்குமிடையே மோதல் உருவாகும் நிலை உருவாகியது. அமைச்சர் மிலிந்த மொறகொடவின் தலையீட்டின் காரணமாக சுமுகநிலை ஏற்படுத்தப்பட்டதாயினும், இதன் பின்னரும் இவ்வித நிலை உருவாக்கப்படுமானால், போர் நிறுத்த உடன்பாட்டைத் தாம் கைவிடவேண்டி ஏற்படுமென புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அறிக்கை வெளியிட்டார்.

**2003 பெப்ரவரி 19ஆம் திகதி**

மானிப்பாய் இராணுவ காவலரண் பகுதியில் இடம் பெற்ற சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஹர்த்தால் இடம் பெற்றது.

**2003 மார்ச் 10ஆம் திகதி**

கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் அமைப்பின் படகு சேதமாக்கப்பட்டதுடன் அதில் பயணித்த 11 விடுதலைப் புலி உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் நாசமாக்கப்பட்ட கப்பல் தமது அமைப்புக்குச் சொந்தமான வாணிபக் கப்பலென விடுதலைப் புலிகள் அமைப்புத் தெரிவித்தது.

**2003 மார்ச் - 16ஆம் திகதி**

விடுதலைப் புலிகள் அமைப்பின் அச்சுறுத்தல் காரணமாக கடந்த 16 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த வில்பத்து சரணாலயம் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

**2003 ஏப்பரல் 10ஆம் திகதி**

விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதித்துவம் இன்றி அமெரிக்கா ஒழுங்கு செய்த ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மகாநாடு வாஷிங்ரன் நகரின் இடம் பெற்றது. அம் மகாநாட்டில் ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் 30 நாடுகள் பங்கேற்றன.

## வியெஸ்ரி

**2003 ஏப்ரல் 14ஆம் திகதி**

வடபகுதியில் கடமையாற்றும் சுமார் 10 ஆயிரம் ராணுவத்தினர் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை தமது குடும்பத்தினருடன் கழிக்க வழிசெய்யும் வகையில் அவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

**2003 மே 14ஆம் திகதி**

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும் பொதுமக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையை உருவாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முறைப்படி நடைமுறைப்படுத்தப்படும் வரை தாம் ஜப்பானில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலோ, அல்லது மேற்கொண்டு எச்சமாதானப் பேச்சுக்களிலோ கலந்து கொள்ளப் போவதில்லையென விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் நோர்வே நாட்டின் வெளிநாட்டமைச்சர் ஜான் பெடரசனிடம் தெரிவித்தார்.

**2003 ஜூன் 3ஆம் திகதி**

வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கான புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணித்திட்டங்களடங்கிய அரசின் யோசனைகளை பிரதமர் நோர்வே வெளிநாட்டமைச்சர் ஊடாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருக்கு அனுப்பிவைத்தார்.

ஜப்பானில் இடம்பெறவுள்ள உதவி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஐரோப்பிய யூனியன், நோர்வே மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன.

**2003 ஜூன் 04ஆம் திகதி**

வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கான புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் தொடர்பான பிரதமரின் யோசனைகளை விடுதலைப் புலிகள் அமைப்பு நிராகரித்தது. இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் அரசினால் முன் வைக்கப்படுமானால் அது குறித்துப் பரிசீலனை செய்யத் தாம் தயாராயிருப்பதாகவும் அவ்வமைப்புத் தெரிவித்துள்ளது.

**2003 ஜூன் 10ஆம் திகதி**

ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் டோக்கியோவில் ஆரம்பமானது. 55 நாடுகளையும், 15 சர்வதேச நிறுவனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் இரு நாள்களாக நடைபெற்ற அந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர். மொத்தம் 4.5 பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளை தொடர்ச்சியாக நான்கு வருடங்களுக்குப் படிப்படியாக வழங்குவதென அந்த மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

**2003 ஜூன் 20ஆம் திகதி**

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அவசியமான மாற்றங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகம் தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்தவல்ல யோசனைகளை முன்வைக்குமாறு அன்ரன் பாலசிங்கம் அரசைக் கேட்டுக்கொண்டார்.

**2003 ஜூன் 24ஆம் திகதி**

2003 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி சமாதானப் பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டதன் பின்னர் முதல் முறையாக நோர்வே நாட்டின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் லண்டனில் வைத்து அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சை மேற் கொண்டார்.

**2003 ஜூலை 17ஆம் திகதி**

இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் யோசனைகள் அடங்கிய நகலை நோர்வே நாட்டின் விசேட பிரதிநிதி யோன் வெஸ்ப்பேக் கிளிநொச்சியில் வைத்து விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச் செல்வனிடம் கையளித்தார்.

**2003 ஓகஸ்ட் 21ஆம் திகதி**

அரசு சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக ஆலோசனைகள் தொடர்பாக ஆராய்ந்தறியும் நோக்கில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய துறைசார் நிபுணர்கள் பாரிஸ் நகரில் கூடிப் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

**2003 ஓகஸ்ட் 25ஆம் திகதி**

இடைக்கால நிர்வாகசபை யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ஜே.வி.பியினர் காலியிலிருந்து கொழும்பு வரை நான்கு நாள்களில் கால்நடையாக சென்றடையும் எதிர்ப்பு நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

**2003 ஒக்ரோபர் 14ஆம் திகதி**

தமது ஆதரவாளர்களுடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் மணிராச குளம் முகாமுக்குச் செல்வதற்கு சிஹல உறுமய மேற்கொண்ட முயற்சியை, அந்த முகாமிலிருந்து 8 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் அவர்களைத் தடுத்து நிறுத்தியதன் மூலம் பொலீஸார் முறியடித்தனர்.

**2003 ஒக்ரோபர் 31ஆம் திகதி**

விடுதலைப் புலிகள் அமைப்பினர் இடைக்கால நிர்வாகம் தொடர்பான தமது மாற்று யோசனைகளை அரசுக்குச் சமர்ப்பித்தனர்.

**2003 நவம்பர் 04ஆம் திகதி**

பிரதமர் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த வேளையில், அது வரையில் பிரதமரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவந்த பாதுகாப்பு, உள்விவகாரம் மற்றும் ஊடகத்துறை ஆகிய மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களையும் ஜனாதிபதி தன்வசம் எடுத்துக்கொண்டார். அத்துடன் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நவம்பர் 19ஆம் திகதிவரை ஒத்தி வைத்தார்.

**2003 நவம்பர் 12ஆம் திகதி**

நோர்வே பிரதி வெளிநாட்டமைச்சர் விடர் ஹெல்ஹிசன் சாதாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியதுடன் வன்னிக்குச்சென்று விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரையும் சந்தித்துப் பேசினார்.

**2003 நவம்பர் 13ஆம் திகதி**

தென் பகுதியில் இடம்பெற்றுவரும் அரசியல் சிக்கல்களுக்கு மத்தியிலும் போர் நிறுத்த உடன்பாட்டை தமது அமைப்பு முறைப்படி அனுசரித்து இயங்கி வருவதாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

**2003 நவம்பர் 14ஆம் திகதி**

தென்பகுதியில் நிலவும் அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வு காணப்படும் வரை தாம் தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்று தங்குவதற்கு முடிவு செய்திருப்பதாக சமாதான நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்கி வரும் நோர்வே நாட்டின் விசேட பிரதிநிதி விடர் ஹெல்ஹிசன் தெரிவித்தார். அவ்விதமே அன்றைய தினம் இரவு அவரும் அவரது குழுவினரும் நாட்டை விட்டுப் புறப்பட்டுச்சென்றனர்.

**2003 நவம்பர் 19ஆம் திகதி**

ஐ.தே.கட்சி தனது இரண்டாவது வரவு செலவுத் திட்டப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

**2003 நவம்பர் 24ஆம் திகதி**

ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. இடையேயான அரசியல் கூட்டு நடவடிக்கைகளுக்கு ஸ்ரீ.ல.சு. கட்சியின் மத்திய செயற்குழு அனுமதியளித்தது.

**2003 டிசெம்பர் 06ஆம் திகதி**

மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களை ஜனாதிபதி தன் வசம் எடுத்துக் கொண்டமையால் உருவாகிய சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காக உருவாக்கப்பட்ட மனோ - மலிக்குழுவின் பேச்சுக்கள் முடிவின்றி நீண்டு செல்வதை அரசு அனுமதிக்க விரும்பவில்லையெனவும், டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான இறுதி முடிவு எட்டப்படாவிடில், பொதுத் தேர்தலொன்றை எதிர்கொள்ளத்தாம் தயாராயுள்ளதாகவும் பிரதமர் தமது கட்சியின் நடவடிக்கைச் சபை முன் தெரிவித்தார்.

**2004 ஜனவரி 01ஆம் திகதி**

ஜனாதிபதி அரசின் வசமிருந்த மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் தம்வசம் எடுத்துக் கொண்டமையால் உருவாகியுள்ள சிக்கல் காரணமாக ஸ்ரீலங்காவுக்குக் கிடைக்கவிருந்த 12 ஆயிரம் கோடி பெறுமதியான வெளிநாட்டு உதவிகளை இழக்க வேண்டியுள்ளதாக அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

**2004 ஜனவரி 02ஆம் திகதி**

நாட்டின் தலைவர்களிருவரிடையே ஏற்பட்டுள்ள அரசியல் வேறுபாடுகளுக்கு விரைவில் தீர்வு காணுமாறும், அவ்வாறில்லாவிடில் அதன் காரணமாக நாட்டில் ஏற்படக்கூடிய பின்னடைவுகளுக்கு இவ்விரு அரசியல் தலைமைகளே பொறுப்பேற்க நேரிடுமெனவும் நாட்டின் வர்த்தக சமூகத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இணைந்த வர்த்தக அமைப்பு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இரு தரப்பினருக்கும் அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவித்திருந்தது.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் மீண்டும் அரசிடம் வழங்கப்படாவிடில், தாம் செய்துகொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையினின்றும் தாம் விலகிக்கொள்ளப் போவதாகவும், புதிதாகப் போர் நிறுத்த உடன்பாடொன்றை உருவாக்கி, சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை ஜனாதிபதி ஏற்க வேண்டுமெனவும் பண்டுவஸ்நுவர என்ற இடத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிரதமர் கருத்து வெளியிட்டார்.

**2004 ஜனவரி 13ஆம் திகதி**

பிரதமர் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்குவதற்குத் தயாராயிருந்த அதிகாரங்களை பொ.ஐ.முன்னணி எதிர்க்காதென ஜனாதிபதி தேசிய தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியொன்றில் கருத்துவெளியிட்டார்.

**2004 ஜனவரி 20ஆம் திகதி**

ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே அரசியல் கூட்டு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

**2004 பெப்ரவரி 07**

இரவு 7.00 மணிக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான டி.எம்.ஜயரத்தின தபால் தொடர்பு சாதன அமைச்சராக, லக்ஷ்மன் கதிர்காமர் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு அமைசராக ஜனாதிபதி முன் பதவிப்பிரமாணம் மேற்கொண்டனர். இரவு 12.00 மணிக்கு ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

*(முற்றும்)*

## கலைப்பீட மாணவருக்குக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ். வசீகரன் கேட்டுள்ளார். (ஐ-ரி)

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



### திருமதி நல்லம்மா சுப்பிரமணியம்

தோற்றம் 03.05.1923 மறைவு 29.01.2004

29.01.2004 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன்,

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.02.2004) வெள்ளிக்கிழமை பின்இரவு அனலைதீவு ஐயனார் தீர்த்தக் கரையில் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து நாளை (28.02.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். - பிள்ளைகள்.

*அனலைதீவு - 5*
*T.P.0712 704667*(29001)(36-16-11) (திருமதி பரத்துவாசன் கௌரிதேவி)

---

வேம்படி மகளிர் கல்லூரி

## வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி

காலம : 28 .02 . 2004 பிற்பகல் 2 மணி.
இடம் : கல்லூரி மைதானம்
பிரதம விருந்தினர்கள் : திரு.ப.விக்னேஸ்வரன் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
திருமதி த.விக்னேஸ்வரன்

பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(33465)(39-11-16) *அதிபர், ஆசிரியர், மாணவர்கள், ஆசிரியரல்லாத ஊழியர்கள் .*

---

வண்ணை - சாந்தையர் மடம்
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
சைவசமய அபிவிருத்திக் கழகம்
சைவசமய அறிவுப் பரீட்சை - 2004

## பரீட்சை நிலைய இடமாற்றம்

(29.02.2004) ஞாயிறு நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் தரங்கள் 8,9,10,11,12,13, மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலிருந்து யாழ். இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. மாணவர்கள் உரிய நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(28992)(39-11-16) கௌரவ செயலாளர், சைவசமய அபிவிருத்திக் கழகம்.

## சீனி விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சீனி விற்பனைக்குண்டு.

**50Kg எடையுள்ள மூடை - 1750/=**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- ஈஸ்வர பகவான் அன் கம்பனி, 91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.; 021 - 2222350

(28999) (30-11-16)

## பாலர் முன்பள்ளி ஆசிரியர் விண்ணப்பம் கோரல்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் நடத்தப்பட்டுவரும் பாலர் பாடசாலைக்கு தகுதியும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பாலர் முன்பள்ளி பயிற்சி பெற்றிருப்பது விரும்பத்தக்கது.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களினை எமக்கு அனுப்பி வைக்க வேண்டிய இறுதித்திகதி 05-03-2004.

*உடுவில் இந்து இளைஞர் மன்றம், மானிப்பாய் வீதி, உடுவில்.* (சி-33468) (30-11-16) -செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க நீண்டகாலப் பணியாளரான அமரர்

### சின்னத்துரை வியாகேசன்

(பிள்ளையார்)

அவர்கள் 26.02.2004 இல் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தெல்லிப்பழை.* (சி-33467) (30-11-16) தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்.

## காரைநகரில் நாளை தையல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.27

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் தையல் மனையியல் கண்காட்சியும் விற்பனையும் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் முதலாம் நாள் நிகழ்வுகள் நடைபெறும். இதில் காரைநகர் உதவி அரச அதிபர் வேசாம்பசிவம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சுந்தரமூர்த்தி வித்தியாலய அதிபர் ஆ.பாலகிருஷ்ணன், கலாநிதி ஆதியாகராஜா மத்திய மகாவித்தியாலய அதிபர் சு.வேலாயுதபிள்ளை, யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

## பரிசளிப்பு விழாவும் திறப்பு விழாவும்

தென்மராட்சி.பெப்.27

விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைத் திறப்பு விழாவும், வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வும் இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய கலைமகள் அரங்கில் அதிபர் கு.கதிர்காமசேகரர் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்விக் கழக பொறுப்பாளர் ஆர்வலனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதனும் கலந்துகொள்வர். (எ-117)

## விளம்பரத்தில் தவறு

உதயன் நேற்றைய(26.02.2004) இதழின் பன்னிரண்டாம் பக்கத்தில் வெளியான குமாரசாமி சோமசுந்தரம் - பிரபலசோதியின் - மரண அறிவித்தலில் தகவல் கொடுத்தவரின் விவரம் கு.சண்முகரத்தினம் (சகோதரன்) என்பதே சரியானதாகும்.

க.சண்முகதாசன் (பங்காளி ஆனந்தா புத்தகசாலை) என்பதும் தவறுதலாகச் சேர்க்கப்பட்டுவிட்டது. பிழைக்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)


**லக்சுமி** இணுவில்
விஜய் - சிம்ரன் - பிரியங்கா விவேக் நடிப்பல்
யூத்
(ரீல்ஸ்)
காட்சிநேரம்: 11.00, 3.00, 6.30 (பு.நே.) (சி-33049)

**லிபேட்டி** அச்சுவேலி
இன்று முதல்
பயங்கரச் சண்டை நிறைந்த படம்
DUNGEONS DRAGONS
காட்சிகள்: 3.00, 7.00 (பு.நே.) (சி-33049)

**நிறைஞ்சனாஸ்** சாங்கானை
தூள்
விக்ரம், த்ரிஷா, விவேக், மனோரமா நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
(ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு
ஜேம்ஸ்பொண்ட் நடித்த CHICACO
இரவு 8.45 (பு.நே.) (C/33334)

**ராஜா** யாழ்ப்பாணம்
பார்த்தீபன், விக்னேஸ் நடித்த
சுதி
(ரீல்ஸ்)
காட்சிநேரம் : 10.30. 2.30,6.30,9.30(பு.நே.)
(C-33050)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல் சத்தியராஜ் ரக்சா, அரவிந்தன் (அறிமுகம்) ஆனந்தராஜ் நடித்த

சேனா
(C/33345)
காட்சிநேரம் : 11.00,3.00,7.00 (பு.நே.)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.27

தெல்லிப்பழை துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் இவ்விழா அடுத்த மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை விசேட அபிஷேகத்துடன் நிறைவுபெறும். (ம-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.27

நல்லூர் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வாலையம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

அடுத்தமாதம் 4ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ம-ரி)

★ ★ ★

வடமராட்சி,பெப்.27

தென்புலோலி சின்னத்தாய் பிள்ளையார் கோவிலில் கடந்த 7ஆம் திகதி முதல் கந்தபுராணப் படிப்பு இடம் பெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை திருக் கல்யாணப் படிப்பும், நாளை சனிக்கிழமை அன்னதானத்துடன் கந்தபுராணப் படிப்பும் இடம்பெற்று நிறைவுபெறும். (ம-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.27

பருத்தித்துறை - தம்பசிட்டி பண்டாரி அம்மன்கோயில் மஹோற்சவ பெருவிழா நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்களுக்கு நடைபெறும் இந்த உற்சவத்தில் மார்ச் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 6 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

விசேட நிகழ்வாக தினசரி மாலை 6.00 மணிக்கு சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-4-86)

# மரண அறிவித்தல்கள்

### ஸ்ரான்லிசயந்தயோகன் சீவகிரிடம் (சயந்தன்)

கல்வியங்காடு செங்குந்தா வீதியைச் சேர்ந்தவரும் கனடாவை வதிவிடமாகக் கொண்ட ஸ்ரான்லிசயந்தயோகன் சீவகிரிடம் (சயந்தன்) அவர்கள அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சீவகிரிடம் (முன்னாள் தொலைத்தொடர்பு திணைக்கள பொறியியலாளர்) - திருமதி பொன்மலர் சீவகிரிடம் ஆகியோரின் அருமை மகனும் பிரதீபாவின் அன்புக் கணவரும் திலீனி, றுவனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகன் (லண்டன்), மகிமலர் (கொழும்பு) பாலன் (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் சச்சிதானந்தன் (Y.F.C.-கொழும்பு), தேவதர்சினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (28.02.2004) சனிக்கிழமை கனடாவில நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.41, கிறகறிஸ்பிளேஸ், தெகிவளை, T.P: 2723955* (29000)(36-11-16) தகவல்: திருமதி பொன்மலர் சீவகிரிடம் (தாய்).

### திருமதி சின்னத்தங்கம் பொன்னம்பலம்

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் பொன்னம்பலம் அவர்கள் கடந்த 24.02.2004 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார். உதயன் பத்திரிகையில் (25.02.2004) புதன்கிழமை பக்கம் 16இல் வெளிவந்தபடி (25.02.2004) புதன்கிழமை தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இடம்பெறவில்லை.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.02.2004) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வயல், சாவகச்சேரி* T.P: 0777 283801 (28997)(36-11-16) தகவல் மகன்மார் பொ.சிவராசா (ரக்ர் சிவா) பொ.சிவகுமார் (கடைா), பொ.ஜெயக்குமார் (ராசா) மித்திரா கொமினிக்கேசன். T.P: 0602212677

### நல்லதம்பி சுப்பிரமணியம்

(மணியம் பாய்க்கடை)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டம் வீதி மற்றும் அசோகா கார்டின், பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சுப்பிரமணியம் (உரிமையாளர், மணிகரன் ஸ்ரோர்ஸ், மணியம பாய்க்கடை) 25.02.2004 அன்று யாழ்ப்பாணத்தில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் தனலட்சுமி (பத்மா) வின் அன்புக் கணவரும் கருணாநிதி (சுவிஸ்), கலைச்செல்வி (பிரான்ஸ்), முத்தமிழ்ச்செல்வி (லண்டன்), பங்கயற்செல்வி (ஜேர்மனி), திருவருட்செல்வி (கனடா), கதிர்காமநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வனஜாம்பிகை (சுவிஸ்), ஞானவரோதயன் (பிரான்ஸ்), ரமணபாலன் (லண்டன்), ராதாமணாளன் (ஜேர்மனி), ஜெயகரன் (கனடா), அகல்யா (பிரான்ஸ்) ஆகியோரின் அனபு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பழனிச்சாமி, இரத்தினகோபால் மற்றும் அந்தரலட்சுமி , லீலாவதி, நாகேஸ்வரி (பத்மா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், தங்கமணி(பிரான்ஸ்), பங்கயத்தம்மா (இந்தியா), காலஞ்சென்ற இரகுப்பிள்ளை மற்றும் பாலகிருஷ்ணன் (கொழும்பு), அன்னலட்சுமி, தனேஸ்வரி, நகுலேஸ்வரி, பரமேஸ்வரி, ஜெயரட்ணம் (பாப்பையா), பேரின்பநாயகி, குணசேகரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*135, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.* (C/33466) (38-11-16) தகவல்: சு.தனலட்சுமி (பத்மா- மனைவி).

### தம்பு குலசேகரம்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு குலசேகரம் 24.02.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாலாமணியின் அன்புக் கணவரும் சந்திரசேகரம் (பிரான்ஸ்), வாசுகி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அப்புலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரரும் சிறீதரன், சுபாசினி (மீரா) ஆகியோரின் மாமனும் சுபேதா, சாஜிதரன், சந்தீப், கீர்த்திகா ஆகியோரின அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவகுருவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு.* (28993)(36-16-11) தகவல் கு. சந்திரசேகரம் (மகன்).

# போரா? சமாதானமா? எது வேண்டும்? தீர்மானிக்கும் காலம் வந்துவிட்டது!

## கண்டிக் கூட்டத்தில் பிரதமர் நேற்று உரை

கண்டி,பெப்.27

"இலங்கைக்கு உதவ முன்வந்துள்ள நாடுகள் இந்த நாட்டின் தலை விதியைத் தீர்மானிக்கும் இந்தப் பொதுத் தேர்தலை மிக்க ஆர்வத்துடன் பார்த்திருக்கின்றன. சமாதானம் வேண்டுமா அல்லது யுத்தம் வேண்டுமா என்ற விடயத்தில் முக்கிய தீர்வை எடுக்க வேண்டிய நேரம் வந்துள்ளதால் கடந்த இரண்டு வருடகால எமது பணியைக் கருத்திற்கொண்டு உரிய முடிவுக்கு வரவேண்டிய பொறுப்பை நாட்டு மக்களிடமே விட்டுவிடுகிறேன்."

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டியில் நேற்று இடம்பெற்ற ஐ.தே.முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரத்திற்குப் பின்னர் இடம்பெற்ற தேர்தல்களின்போது - கண்டியில் வரலாறு காணாத அளவுக்கு நகரின் பல இடங்களிலும் மக்கள் முண்டியடித்த நிலையில் குழுமி இருக்க - இம்முறை பிரசாரத்தை ஐ.தே.க.ஆரம்பித்தது.

எம்மோடு இங்கு மலையக மக்கள முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், இதொ.கா. எனப் பல கட்சிகள் இணைந்துள்ளன. அமைச்சர் ரவூப் ஹக்கீம், தாம் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாமல் இருப்பது குறித்து என்னுடன் பேசினார். நாம் எடுத்த முடிவுக்கு ஏற்ப அவர் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடுகிறார். அடுத்த கூட்டத்தில் எம்மோடு கலந்து அவர் உரையாற்றுவார்.

"ஒக்டோபர் 8இல் ஓமந்தை, சாவகச்சேரியில் அரசின் பலம் வீழ்ந்ததை அடுத்து புலிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தைத் தாக்கி அழித்தனர். அன்றைய நிலையில் நாட்டைக் காப்பாற்றுவதா அன்றி மீட்டெடுப்பதா என்ற கேள்வி பலரிடம் எழுந்தது.

இதனையடுத்தே நாம் ஆட்சிக்கு வந்ததும் நோர்வேயின் உதவியுடன் புலிகளுடன் இணைந்து பேசி யுத்த நிறுத்தத்துக்கு வந்தோம்.

ஆறுவருடகாலப் பதவிக்கு வந்த நாங்கள் இரண்டு வருடங்களில் சமாதானத்தை உருவாக்கி யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு பொருளாதாரத்தை சீர்படுத்தக் கருதினோம். இதற்கு மத்தியில்தான் ஒரே மேசையில் அமர்ந்து புலிகளுடன் பேசி, ஒப்பந்தங்கள் செய்து, யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள முடிந்தது. சமாதானத்திற்கு புலிகளின கதவு திறக்கப்பட்டதால் அதன மூலம் அதற்கான சகல முயற்சிகளையும் நாம் மேற்கொண்டோம்.

நாம் பதவியேற்ற வேளையில் நாட்டில் வருமானத்தில் 80 வீதம் முன்னைய அரசு எடுத்த கடனுக்கான வட்டியைச செலுத்தவே செலவிடப்பட்டது.

நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமான கட்டத்தில் இருந்தது. அதனை எல்லாம் நாம் சரி செய்து சீராககியபோதே எமக்கும் ஜனாதிபதிக்கும் இடையே முறுகல் நிலை உருவாகியது. நவம்பரில் உருவான இந்த முறுகல் இப்பொழுது பொதுத் தேர்தல் ஒன்றுக்கு வழிவகுத்துவிட்டது.

ஜனாதிபதியுடன் இயலுமானவரை புரிந்துணர்வுடனேயே செயல்பட முயற்சித்தோம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அரசியல் தீர்வுக்கான பிரச்சினைகளையும் சர்வதேச மட்டத்தில் படிப்படியாகக் கொண்டு வந்து உலக நாடுகளின் கவனத்திற்கு மத்தியில் தீர்வுகாண முற்பட்டோம். இதனை உணர்ந்த ஐம்பது உலக நாடுகள் நமக்கு உதவ முன்வந்ததுடன் 45 ஆயிரம் கோடி ரூபாவை அபிவிருத்திக்காக வழங்கவும் இணங்கின.

ஆசிய வங்கி, உலக வங்கி, ஐநா. சபை போன்றவையின அயராத முயற்சியினால் நாடு விரைவில் சுபீட்சமடையப் போவதை அறிந்து அனைவருமே மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்த மகிழ்ச்சியான நிலைமையை ஜே.வி.பியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் வேறு கண்கொண்டு நோக்கின.

அரசு - புலிகள் பேச்சுக்கள் ஊடாக இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த முயற்சிகள் நடந்தன. இதனைக்கூட ஜே.வி.பியினர் எதிர்த்து நின்றனர். அதிகாரப் பரவலாக்கலையும் அக்கட்சி விரும்பவில்லை. விரைவில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற அழுத்தமும் வாய்ப்பும் டோக்கியோப் பேச்சுமூலம் ஏற்பட்டது. அப்படி அந்த முயற்சிகள் வெற்றிபெற்றால் அனைத்தும் அரசுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும் எனக்கருதி அரசுடன் முறுகல் நிலையை உருவாக்கி மக்கள் மத்தியில் தவறான கருத்துகளை அவை முன்வைத்தன.

இந்தப் போக்குத் தொடர்ந்தால் - அவர்கள் விரும்புவது நடந்தால் உலகில் நாம் தனிமைப்படுத்தப்படுவோம் என்ற அச்சம் எழுந்தது. இந்த அச்சம் இன்னும் நீங்கியபாடில்லை. இத்தகைய இக்கட்டான ஒரு நிலையில் தான் மீண்டும் பொதுத்தேர்தல் ஒன்றை நாம் நோக்கியுள்ளோம். இலஙகைக்கு உதவி வழங்கும் நாடுகள் பலவற்றின் அனுதாபம் இந்த நிலையில் புலிகள் பக்கமே சாரும். சமாதான நடவடிக்கைகளில் இருந்து விலகினால் யுத்தத்தை நோக்கி நாடு செல்லவேண்டி ஏற்படும்.

இடைக்கால நிர்வாகம் குறித்து நாம் பேச முற்பட்டபோது நோர்வே அனுசரணையாளர்களை நாட்டை விட்டு அனுப்புங்கள் என்றும் குரல் எழும்பியது இன்றைய நிலையில் புதியதோர் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க நாம் முற்பட்டால் உலக நாடுகள் அதனை ஏற்க முன்வரா.

மக்கள் இத்தகைய நிலைமையைப் புரிந்துகொண்டு தேர்தலில் தீர்ப்பு வழங்க தயாராக இருக்கின்றனர். நிச்சயமாக இத்தீர்ப்பு மீண்டும் எம்மை ஆட்சியில் அமர்த்த உதவும் என நம்புகின்றேன். அடுத்த ஒரு தசாப்த காலத்துக்குள் தொழில், பொருளாதாரம் மற்றும் சகல அபிவிருத்தித் திட்டத்துறைகளையும் முன்நகர்த்தி நாட்டை புதிய பாதையில் வழிநடத்தச் செல்ல நாம் தயாராக இருக்கினறோம். ஜே.வி.பியினரின் அட்டகாசங்களை மக்கள் மறந்துவிடவில்லை. பிரபல திரைப்பட இயக்குநர் கே.குணரத்தினம் உட்பட பல வர்த்தகர்கள் கொல்லப்பட்டார்கள். தோட்டங்களில் நிகழ்ந்த அட்டகாசங்களும், கொலைகளும் மறந்துவிடக்கூடியவையல்ல. 1988-1989 ஆண்டுகளை மீட்டிப்பார்க்கும மக்கள் இவ்வாறான யுகம் மீண்டும் உருவாக அனுமதிப்பதா என்று எண்ணுகிறார்கள். எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் நாள் இதற்குப் புத்தியுள்ள மக்கள் சரியான பதில் கூறுவார்கள.

மக்களை ஒருபோதும் ஏமாற்ற இயலாது. தீர்மானம் எடுக்கும் திறமை அவர்களிடமே உண்டு. எனவே அவர்களிடமே இதனை விட்டுவிடுகின்றேன். சமாதானம் நிலைத்து நாடு சுபீட்சமான எதிர்காலத்தை அடைவதற்கான அறிகுறியை இக்கூட்டத்தில் நன்கு காண்கின்றேன். நாம் தீட்டப்போகும் பத்து வருட அபிவிருத்தித்திட்டம் நிச்சயமாக நாட்டைச் சகல வழிகளிலும் முன்னெடுக்கும்.

சமாதானத்தின் வெற்றியே இத் தேர்தலின் முடிவாகும். இறுதியில் நாமே வெற்றிபெறுவோம். அனைவரும மகிழ்ச்சியுடன் வாழ முனைவோம் - இப்படி அவர் கூறினார்.

## வன்னி விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,பெப்.27

தமிழ்த் தேசியப் பெரு விளையாட்டு விழாவில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:-

★ தாச்சி - பெண்கள்:- யாழ். மாவட்ட அணி, முல்லைத்தீவு மாவட்ட அணியை 2:0 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது.

★ தாச்சி - ஆண்கள்:- கிளிநொச்சி மாவட்ட அணி யாழ்.மாவட்ட அணியை 18:17 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ கரப்பந்தாட்டம் (ஆண்கள்):- திருமலை மாவட்ட அணி யாழ்மாவட்ட அணியை 3:0 என்ற 'நேர் செற்' கணக்கில் வென்றது.

★ கரப்பந்தாட்டம்(பெண்கள்): திருமலை மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 3:0 என்ற செற் கணக்கில் வென்றது.

★ கபடி (ஆண்கள்):- வவுனியா மாவட்ட அணி யாழ் மாவட்ட அணியை 51:32 என்ற அடிப்படையில் வென்றது.

★ கபடி (பெண்கள்):- மட்டக்களப்பு மாவட்ட அணி வவுனியா மாவட்ட அணியை 21:20 என்ற அடிப்படையில் வென்றது.

★ வலைப்பந்தாட்டம்:- யாழ். மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 60:32 என்ற அடிப்படையில் வெற்றியீட்டியது.

துடுப்பாட்ட அரையிறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி அம்பாறை மாவட்ட அணியை 3 விக்கெட்டுக்களால் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை -

இறுதி நாளான இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள துடுப்பாட்ட இறுதிப்போட்டியில் யாழ். மாவட்ட அணியும் மட்டக்களப்பு மாவட்ட அணியும் மோதவுள்ளன.

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதும்.

வெற்றியீட்டிய அணிகளுக்கான பரிசளிப்பு விழா இன்று மாலை இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-4-5)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இம்மாவட்டத்தில் 2 ஆயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் பலர் ஆயுதபாணிகளினால் இம்மாவட்டத்தில் [illegible] கொலை செய்யப்பட்டுள்ளனர். [illegible]00 ஆம் ஆண்டு பொதுமக்கள் [illegible] முன்னணி வேட்பாளர் செழி[illegible] பேரினபநாயகமும், 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தம்பிராசா ஜெயக்குமாரும் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

இம்மாவட்டத்தில் வாக்குச் சாவடிகளிலும் பல அத்துமீறல்கள் இடம்பெறறுள்ளன.

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றும் இயந்திரங்களை அங்கு பாவிக்க முடியாது" என்று அவர் அரச அதிபரிடம் தெரிவித்தார்.

இதன் காரணமாக முகமாலை யுத்த சூனியப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களை இராணுவக் கட்டுப்பாடற்ற கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கவேண்டும். இல்லையேல் முகமாலையில் இராணுவச சோதனை நிலையத்தில் அமைக்க வேண்டும் என்று அரச அதிபர் கூறினார்.

இராணுவச் சோதனை நிலையத்தைப் பின்னகர்த்திவிட்டு வாக்களிப்பு நிலையத்தை அந்தப் பகுதியில் அமைக்கலாம் என்றும் அரச அதிபர் கூறினார்.

இது விடயமாக தேர்தல் ஆணையாளருடன் கலந்துரையாடவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

நந்தன் அக்கடமி
SPOKEN ENGLISH / ORGAN வகுப்புகள்
ஆரம்பம் : 29.02.2004
ஆசிரியர்: திரு.கணேசன்
தரம் 3 - A/L வரை
ஞாயிறு காலை 8.00 (மு.ப.)
(28972)
சாவகச்சேரி கொடிகாமம்

## புளியங்குளம் வீதி விபத்தில் இளைஞர் உயிரிழந்தார்

புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இந்த இளைஞர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியது என்று கூறப்படுகின்றது. அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்தவரின் மோட்டார் சைக்கிளில் கூடச் சென்ற மற்றொரு இளைஞர் படுகாயமடைந்தார்.

உயிரிழந்தவர் ரெங்கசாமி ஜெகதீஸ்வரன் (வயது 21 - புளியங்குளம்) என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறார். காயமடைந்தவரான சசிகரன் (வயது 23) என்பவர் வவுனியா [illegible] மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

இவர்கள் இருவரும் வவுனியாவில இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதி நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயமே இந்த விபத்து நேர்ந்திருக்கிறது. (ஐ-164)

### தேர்தல் விஞ்ஞாபனம் இன்று அறிவிப்பு?

திருகோணமலை,பெப்.27

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் நிலையில் இந்தக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பெரும்பாலும் இன்று வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் இன்று கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தினை ஊடகவியலாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை, இன்றைய அரசியல் நிலைவரம் மற்றும் தமிழ் பேசும் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் இந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ-187)

### மேலும் 200 அ.அட்டைகள் தென்மராட்சியில் விநியோகம்

தென்மராட்சி,பெப்.27

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நடமாடும் செயலகத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்த மேலும் 200 பேரின் அடையாள அட்டைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குக் கிடைத்துள்ளன.

தேசிய அடையாள அட்டைகள், அந்தந்தக் கிராம அலுவலரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக அடையாள அட்டைப் பிரிவினர் தெரிவித்தனர்.

நடமாடும் செயலகத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் ஏற்கனவே 650 அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## ரணிலுக்குக் கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட பலரும் சென்றிருந்தனர்.

மகாநாயக்கர் பிரதமரை ஆசீர்வதித்துப் பேசுகையில், நீங்கள் நாட்டை ஆண்ட 2 வருடங்களில் சமாதானமும், மக்களின் நலன்களும பேணப்பட்டன. இவற்றை நீங்கள் தொடரமுடியவில்லை, ஜனாதிபதியும் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

இப்பொழுது மீண்டும் தேர்தலுக்கு முகம் கொடுக்க வந்திருக்கிறீர்கள். இதன்மூலம் உங்களுக்கு வெற்றி கிட்டவும், இதன் ஊடாக நாடும், நாட்டு மக்களும் சுபீட்சம் அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்துப் பேசுகையில், "தேர்தலுக்குப் பின்னர் மீண்டும் எனது பணியைத் தொடர்வேன். தடைப்பட்டுப்போன சகல அபிவிருத்திப் பணிகளையும் நான் முன் கொண்டு செல்ல உறுதி பூண்டுள்ளேன். மகா சங்கத்தினரின் நல்லாசிகளை நான் பெரிதும் மதிக்கின்றேன்" - என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளர்கள் அனைவரும் நேற்று முற்பகல் அநுராதபுரம் ஜயஸ்ரீ மகாபோதியை வழிபட்ட பின்னர் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் வணக்கஸ்தலங்களுக்குச் சென்று சமய அனுட்டானங்களை மேற்கொண்டனர். அதன் பின்னர், மகாபோதியில் ஆறு அம்ச உறுதியை எடுத்துக்கொண்டனர்.

மகிந்த ராஜபக்ஷ, சோமவன்ச அமரசிங்க, தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ச முதலான தலைவர்கள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

எடுத்துக் கொள்ளப்பட்ட உறுதியின் சாராம்சம் வருமாறு:-

2547 ஆகிய ஸ்ரீ புத்த வருடம் மாசி மாதம் இருபத்தாறாம் நாளன்று சூரிய உதயத்தின் முற்பகலுடன் உதயமாகும் சுபமுகூர்த்தத்தில், இலங்கைவாழ் மக்கள் சமூகத்தின் சங்கற்பத்தின் அடையாளமாகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அநுராதபுரம், ஸ்ரீ மகாபோதி முன்றிலில் இருந்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தேர்தல் அபேட்சகர்களான நாம் அனைத்து மதங்களையும், நம்பிக்கைகளையும் மக்கள தடங்கலின்றிப் பின்பற்றும் உரிமையை அவர்களுக்கு உறுதிப்படுத்துகிறோம். சமத்துவத்துடன், அனைத்து மதங்களுக்கும் அரசாங்க அனுசரணையை வழங்குவோம். ஒவ்வொரு தரப்பினரதும் தனி முத்திரையாக அமையும் நாகரிகங்களையும், தேசிய அடையாளங்களையும் உள்ளவாறே பேணுவோம், ஒன்றுபட்ட தேசத்தின் ஐக்கிய சமூகமொன்றாக எமது தாயகத்தைப் பாதுகாப்போம்.

தேசியப் பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

உறுதியான அரசாங்கக் கட்டமைப்பொன்றைக் கட்டியெழுப்பவும் நியாயமான நல்லாட்சி முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான ஏற்பாடுகளை உள்ளடக்கிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவோம்.

உயர்ந்த பொருளாதாரப் பரப்பெல்லையொன்றை உருவாக்குவதனூடாக 21 ஆம் நூற்றாண்டில் செழிப்புமிக்க நாட்டில் காலடி எடுத்து வைப்பதற்கு அவசியமான சக்தியை எமது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்போம். தேர்தல் சட்டதிட்டங்களுக்கு இணங்கவும், எதிரணி அரசியல் குழுக்களும் அரசியலில் ஈடுபடும் உரிமைக்கு மதிப்பளித்தும், தேர்தல் ஒழுங்காக நடைபெற மனப்பூர்வமான அர்ப்பணிப்புடனும், தேசப்பற்றுடனும், தேசிய உணர்வுடனும் ஒத்துழைப்போம். இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பற்றுணர்வுடன் இந்த உறுதிமொழி பகர்கின்றோம்.

இப்படி அவர்கள் உறுதி எடுத்துக் கொண்டார்கள். இவர்களின் முதலாவது பிரசாரக்கூட்டம் பிற்பகலில் அநுராதபுரத்தில் நடந்தது. ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டமும் நேற்றுப் பிற்பகல் கண்டியில் நடந்தது.

Touch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA in MS OFFICE
கற்கை நெறிக்கான புதிய மாலை நேரப் பிரிவுகள் இன்று (27.02.2004) மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. பதிவு செய்த சகல மாணவர்களும் சமுகமளிக்கவும்.
- DIRECTOR
(23937)

NEW SCIENCE COLLEGE
PHYSICS
2006 பொறியியல்
சனி, ஞாயிறு - 8 - 9 (a.m)
2005 ஈர்ப்புப்புலம்
சனி, ஞாயிறு - 6 - 7 (a.m)
By. R.குகன்
(28963)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.